தமிழர்

# தகவல்

இலண்டன்

Tamils' Information

நவம்பர் 2005



Sri Panjamuga Vinayagar - Srilanka



Sri Mariyamman - Singapore



Sri Dhathariyar - Canada



Sri Perumal ( 9 Feet )
Thangal Asramam, Vellore



Sri Vinayagar - Germany



Nellaiyappar - Gandhimathi Thayar
Tirunelveli



Sri Kannagi - ( 6 Feet )
Sri Kailasanathar Temple, Srilanka

மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest




இலண்டனில் தரமான தங்கத்திற்கு

# Lakshmis Jewellers

276 High Street North London E12 6SA U.K

Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

# தமிழர் தகவல் Tamils' Information

நவம்பர் 2005 மலர் : 03 இதழ் : 29

" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." - குறள்

## " கார்த்திகைத் திருவிழா "

தீபாவளி வந்து விட்டது. எல்லாத் திசையிலும் வெடிச் சத்தம். இந்த வேளையில் தீபாவளி தமிழர்களின் பண்பாட்டோடு தொடர்புடையதுதானா என்ற ஒரு வினா எழுகிறது. பழந்தமிழ் இலக்கியங்களில் இப்படி ஒரு விழா பற்றிய செய்தி எங்கும் கிடைக்கவில்லை. ஆனால் இந்திர விழா முதலான வேறு பல விழாக்களை நம் இலக்கியங்கள் எடுத்து வைக்கின்றன.

குறிப்பாக, நான்கு விழாக்கள் தமிழர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து கிடப்பதைக் காண முடிகிறது. ஆண்டின் தொடக்கத்தில் பொங்கல் விழா, கோடையில் இந்திர விழா, ஆடியில் ஓடிவரும் புதுப்புனலுக்கு விழா, ஆண்டின் இறுதியில் கார்த்திகைத் திருவிழா என்று நான்கு விழாக்கள் நம் மண்ணில் கொண்டாடப்பட்டுள்ளன.

எண்ணிப்பார்க்கும் வேளையில் இந்நான்கு விழாக்களும் மக்கள் வாழ்வோடும், பருவ மாற்றங்களோடும் தொடர்புடையனவாக இருப்பதை உணரலாம். இளவேனிலில் பொங்கல், கோடையில் இந்திர விழா, மழைக்காலத்தில் ஆடிப்பெருக்கு, பனிக்காலத்தில் கார்த்திகை என நான்கு பருவங்களின் தொடக்கங்கள் நான்கு விழாக்களாக அமைகின்றன.

வசந்தம் என்று அழைக்கப்படும் இளவேனிலைக் கொண்டாடிய தமிழர்கள் கோடையையும் கொண்டாடி இருக்கிறார்கள் என்பது குறித்துக்கொள்ள வேண்டிய செய்தி. இன்பமும் துன்பமும் வாழ்க்கையின் நியதி என்பதைப் புரிந்தே இரண்டிற்கும் விழா எடுத்துள்ளனர் தமிழர்கள்.

" அன்பு மயில் ஆடலுக்கு மேடையமைத்தான் - அங்கே
துன்பமெனும் நாடகத்தைக் கண்டு ரசித்தான் "

என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதியுள்ளதைப் போல, ஆட்டத்தை மட்டுமின்றி, துன்பத்தையும் கண்டு ரசிக்கும் மனப்பக்குவம் எல்லோருக்கும் வந்து விடாது. இயல்பாகவே அது தமிழர்களுக்கு இருந்திருக்கிறது.

மேலும், பொங்கல் என்பது, பாடுபட்டு உழைத்த பாட்டாளியின் வீட்டில் புதுப் பொங்கல் பொங்கும் அறுவடை நாளாகவும் உள்ளது. எனவே, விளைச்சலை, வளர்ச்சியை மகிழ்ச்சியாய்க் கொண்டாடும் மன இயல்பே நம் விழாக்கள்.

ஆனால் தீபாவளி என்பதோ நரகாசுரன் கொல்லப்பட்டான் என்பதை எண்ணிக் கொண்டாடும் விழாவாகக் கொள்ளப்படுகிறது. நரகாசுரன் என்றொருவன் இருந்தானா, இல்லையா, அவன் நல்லவனா, கெட்டவனா என்பனவெல்லாம் ஒருபுறம் இருக்க, இன்னொருவன் சாவைக் கொண்டாடும் சரித்திரம் எப்போதும் நம்மிடம் இல்லை.

கர்ணனுக்குப் பிறகு கொடையுமில்லை, கார்த்திகைக்குப் பிறகு மழையுமில்லை என்பது நம் பழமொழி. மழைக்கு விடை சொல்லி, பனியை வரவேற்கும் இனிய விழாவே கார்த்திகைத் திருவிழா. அவ்விழா மெல்ல மெல்லத் தன் முக்கியத்துவத்தை இழந்து, தீபாவளித் திருவிழா மக்களிடம் புகழ்பெற்றிருக்கக்கூடும். இரண்டும் தீபங்களை ஏற்றும் விழாக்களே என்றாலும் இரண்டிற்குமான நோக்கங்கள் வேறு வேறாக உள்ளன.

எவ்வாறாயினும், கார்த்திகையில் நாம் விழாவைக் கொண்டாடலாம். நரகாசுரன் கொல்லப்பட்டதற்காக அன்று, நம் தேசியத் தலைவர் பிறந்த மாதம் இது என்பதற்காக.

முகவரி :
41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
020 8480 3320

Email :
tamilarthakaval@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan

வங்கி :
H.S.B.C
A / C Name :
TAMILS' INFORMATION
SORT CODE : 40-35-30
A / C No.: 81437100

கணினி, அச்சுப்பதிப்பு :
தமிழர் தகவல்

Computering & Printing :
Thamizhar Thagaval

படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே

4000 பிரதிகள்

இதில் காணப்படும் புடவைகள் யாவும் சுத்தமான காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள்







இந்தத் தகவல் சுத்தமான
அசல் காஞ்சிபுரம் பட்டு
வாங்குபவர்களுக்கு மட்டும்

இவை இந்திய விலைக்கே
எடுத்துத் தரப்படும்

தொடர்புகளுக்கு
திருமுருகன் அறிவகம்
தொலைபேசி : 020 8480 3320
















அன்பு வாடிக்கையாளர்களுக்கு எங்கள் உள்ளம் கனிந்த
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

# Tharani Jewellery

54 Ealing Road Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 8902 6777

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

• Immigration and Nationality Law • Work Permit Applications • Highly skilled migrant programme • Tourist visa application and extensions • Student visa applications and extensions • Permenant resident applications if you have lived in the UK for 7/10/14 years • Asylum applications and appeals • Human Rights applications • Bail and detention matters • European citizens applications • Sponsership Declarations • Family Reunion applications • Houses Flats and Business buying selling and re-mortgaging • Traffic offences • Cases before Magistrates Court and County Court • Drafting Will • Drafting Power of Attorney • We are authorised by the Legal services Commission to provide free legal advice.

**We are also able to assess your knowledge in English Language for Nationality applications**

# RATNA & COMPANY SOLICITORS

(London)

**Contact :**

Mr. M. or Mrs. K. Ratnapalan 169, High Street North, East ham, London E6 1JB
**Tel: 020 - 8470 8818, Fax: 020 - 8475 0131**
**Mobile: 07906 862 292 [Mr.Ratna], 07769 748409 [Mrs. Ratna]**
email: k_ratna@ratna.co.uk or mratnapalan@hotmail.com web: www.ratna.co.uk

## அங்கீகாரம் வருமா?

யூகோஸ்லாவியா வீழ்ச்சியுற்றபோது கோசோவா சுயநிர்ணயப் போராட்டம் கூர்மையடைந்தது. இந்தப் போராட்டத்தில் கோசோவா விடுதலை இராணுவத்தை, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, பிரிட்டன் போன்றவை அங்கீகரித்து மிலோசேவிக் அரசுடன் சமத்துவமாகப் பேசுவதற்கு ஊக்குவித்தன. பேச்சுக்களின் போது மிலோசேவிக் அரசு கோசோவா மக்களின் உரிமைகளை வழங்க மறுத்தபோது அந்த அரசின்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் இலங்கையில் அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச சமூகம் என்பன தமிழ் மக்களின் இயல்பு வாழ்வு உரிமைப் பற்றிப் பேசமுற்படும்போது அதனை மறுதலிக்கும் இலங்கை அரசின்மீது நெருக்குதலை ஏற்படுத்தாதது ஏன்? என்ற தமிழ் மக்களின் கேள்விக்கு சர்வதேச சமூகம் பதில் கூறவேண்டும். இது குறித்த செய்தியை தென்னிலங்கை சக்திகளுக்கு சர்வ தேச சமூகம் திட்டவட்டமாக தெரிவிக்க வேண்டும்.

(வீரகேசரி ஆசிரியத் தலையங்கம்)

## சாதனை என்ன?

இதுவரை தமிழர் கூட்டமைப்பு எதனையுமே சாதிக்கவில்லை. இது வெளிப்படையாகத் தெரிந்த விடயம். நாடாளுமன்றத்தை வைத்துத்தான் நாங்கள் ஏதோ பெரிதாக சாதிக்கப் போகிறோம் என்று நினைப்பதும் தவறு. மேடைகளின் ஏறிநின்று நீங்கள் எங்களுக்கு வாக்களியுங்கள். உங்களின் உரிமைகளை நாம் வென்றெடுத்துத் தருவோம் என ஒருபோதும் நாங்கள் தமிழ் மக்களிடம் கேட்கவில்லை. ஏனெனில் தமிழ் மக்களின் பிரச்சினையை விடுதலைப்புலிகளின் தலைமைத்துவம்தான் தீர்த்துவைக்கும். அதே நேரம் நாடாளுமன்றத்தில் முன்பிருந்த மிதவாதத் தலைவர்கள் சாதிக்க முடியாததையா இன்றுள்ள கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாதிக்கப்போகின்றனர். கூட்டமைப்பில் இன்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை விட படிப்பிலும் விவேகத்திலும் முன்பு இருந்த மிதவாதத் தலைவர்கள் வளர்ச்சியடைந்தவர்கள். அவர்கள் பேசித் தீர்க்க முடியாத விடயங்களையா நாங்கள் பேசி தீர்க்கப்போகிறோம். சிறு சிறு வேலைகளைச் செய்துள்ளோமே தவிர அடிப்படையில் விடுதலைப் போராட்டத்தின் அத்திவாரத்துக்கு நாங்கள் எதையுமே செய்யவில்லை.

(கஜேந்திர குமார் பொன்னம்பலம் நா.உ)

## திறமையும் வெற்றியும்

திறமையான படையணி பன்பது வெல்ல முடியாத நிலைக்கு தான் உயர்ந்தபின்னும் எதிரிவிடக்கூடிய தவறுகள் ஊடாக வெற்றிப் பெறுவதற்குக் காத்திருக்க வேண்டுமென்பது உலக சரித்திரத்தில் உள்ளது. எதிரி தன்னைத்தானே அழிப்பதை ஊக்குவிக்கவேண்டுமென்று உலக சரித்திரம் சொல்லுகிறது. எமது விடுதலைப் போராட்டம் காரணமாக யார் பயங்கரவாதி? யார் போராளி என்பதை சர்வதேச சமூகம் ஐ.நா. சபையிலே முடிவெடுக்காமல் போயிருக்கிறது. இலக்குகளை உரியகாலத்தில் ஒரு விடுதலைப் போராட்டம் அடையாமல் நீண்டகாலம் நீடித்தால் அதன் இருப்பே கேள்விக்குறி ஆகிவிடும். இதற்காகத்தான் பேச்சுவார்த்தை என்ற பெயரில் நீடிப்பார்கள். ஆனால் எங்களுக்கு வரலாற்றுப் பட்டறிவு உண்டு.

1970களில் ஜே.வி.பி போன்ற தீவிரவாத இயக்கம் தீர்ந்துபோனதுபோல் புலிகளும் பேச்சுவார்த்தை மூலம் தீர்ந்துபோவார்கள் என்று எதிர்ப்பார்த்தார்கள். ஆனால் அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இதனால் உலகம் எங்கள் விடயத்தில் அதிர்ச்சியடைந்து தத்தளித்தது.

(கா.வே. பாலகுமாரன் - தினக்குரல்)

## வெளிவரும் உண்மைகள்

உலகளாவிய ரீதியில் சர்ச்சைக்குரிய மனிதரான சதாம் ஹுசைன்தான் ரோகண விஜேவீரவுக்கு அதிக அளவு பணத்தை அள்ளி வழங்கியவர். தலைவர் ரோகண விஜேவீரவும் முந்நாள் ஈராக் அதிபரும் நண்பர்கள். 1989ம் ஆண்டு விஜேவீரவின் பிறந்த நாளுக்காக 115 லட்சம் இலங்கை ரூபாயை வழங்கினார் சதாம் ஹுசைன். அப்போது இலங்கையில் இருந்த ஈராக் தூதுவரே இதனை நேரடியாக விஜேவீரவிடம் ஒப்படைத்தார். அந்தப் பணம் முழுதும் ரோகண கட்சிக்கு அன்பளிப்பாக வழங்கிவிட்டார். அதேவேளை தலைவர் ரோகண தலைமறைவாயிருந்த வேளையில் பணம் தேவைப்பட்டது. இதனால் வங்கிகளில் கொள்ளையடித்து தங்கத்தைச் சேகரித்தோம். இவ்வாறு திரட்டப்பட்ட தங்கம் வறக்காப்பொல - பசியாலையிலும் புதைக்கப்பட்டிருந்தது. பசியாலையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த தங்கம் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டபோது. களனிப் பாலத்தில் வைத்து பொலிசாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

களுத்துறையில் புதைக்கப்பட்டிருந்த தங்கத்தை சோமவன்ச அமரசிங்க சிறுதுசிறிதாகக் கடத்தி மோசடி செய்ததுடன் தனது சகோதரர் மற்றும் குடும்பத்தவர்களின் பெயர்களிலும் அவர் சேகரித்து விட்டார். கட்சிக்கு செய்த துரோகம், நிதி மோசடி என்பவற்றிற்காக ஜே.வி.பியினரால் சோமவன்சவுக்கு மரண தண்டனை வழங்க தீர்மானிக்கப்பட்டது. நான் கூறும் விடயங்கள் அனைத்திற்கும் என்னிடம் சான்றுகள் உள்ளன. அதனை எவ்விதத்திலும், யார் முன்னிலையிலும் வெளிப்படுத்தத்தயார் என்றும் சவால் விடுகிறேன்.

(இலங்கையில் டாக்டர் சுபாய் சந்திர பெர்னாண்டோ (ரோகணவின் மைத்துனர்) பேச்சு)

## வரலாற்றில் ஒரு அரசியல் நிகழ்வு

1965 தேர்தலின் பின்னர் டட்லி சேனநாயக்க ஒருவித அரசாங்கமொன்றை தமிழரசு, தமிழ்காங்கிரஸ் கட்சிகளுடன் அமைத்தார். இந்த அரசாங்கம் 1965 - 1970 வரை எடுத்த ஒரு தீர்மானத்தின் காரணமாக திருகோணமலை ஒரு தமிழ் நகரம் என்ற நிலைமைக்கு வேட்டுவைக்கப்பட்டது. திருகோணமலைத் துறைமுகத்தை தேசியமயமாக்குவதுதான் அந்தத் தீர்மானம். இந்த நடவடிக்கையை அரசு மேற்கொண்டபோது, தமிழரசு கட்சி அந்த அரசுடன் இடம் பெற்றிருந்தது என்பது ஒரு விசித்திரமான சம்பவம். கட்சியின் உறுப்பினர் திருச்செல்வம் அந்த அரசில் ஒரு அமைச்சராக இருந்தார். கிழக்கு மாகாணம் சிங்களமயமாகக்கப்பட்டு வருவதற்கு எதிராக 16 ஆண்டுகட்கு மேல் போராடிவந்த கட்சி இது. கொழும்பிலிருந்து ஏராளமான சிங்களவர்களை கூலிகளாக கொண்டுவந்து சேர்ப்பதற்கு வாசலைத் திறந்துவிடுகிறோமென்று தெரிந்துகொண்டிருந்தும் அத்திட்டத்திற்கு கட்சி ஆதரவளித்தது. இந்த விடயத்தை கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் கிளப்பி பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்தேன். அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டிய நிலை வந்தாலும், அடுத்து அரசு வீழ்ச்சியுற்றாலும் இத்திட்டத்தை எதிர்த்தே ஆகவேண்டும் என்று நான் வாதிட்டேன். நூற்றுக்கணக்கான தொண்டர்கள் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கட்சிக் காரியாலயத்தை முற்றுகையிட்டார்கள். ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இறுதியில் கெஞ்சியும் பார்த்தார்கள். எல்லாம் பயனற்றுப் போயின. எந்த வகையிலும் அமைச்சர் பதவியைக் காப்பாற்ற வேண்டுமென்று திருச்செல்வம் கருதினார். திருகோணமலைத் தமிழ் மக்களைத் தூண்டிவிட்டு ஆர்ப்பாட்டம் செய்யவைத்தேன் நான் என்று அமிர்தலிங்கம் என்னை கூடாத வார்த்தைகளால் சாடினார். அவரின் சொற்கவர்ச்சியினால் திருச்செல்வத்தின் அமைச்சர்பதவி காப்பாற்றப்பட்டது

( தலைவர் வ. நவரத்தினம் - ' THE FALL AND RISE OF THE TAMIL NATION ')

ரூட்டிங்கில் முதல் தமிழ்க்கடை

Prime Food & Wine

News Papers & Magazines, Off Licence - Grocery
Asian & Sri Lankan Groceries - Fruits & Vegetables

மணங்கவரும் மளிகைச்சாமான்கள், மென்பானங்கள்,
மதுபான வகைகள், பழங்கள்,
மரக்கறி வகைகள், மீன், இறைச்சி
என எல்லாவற்றிற்கும்
குறைந்த விலையில்
நிறைந்தசேவையைப்
பெற எம்மை நாடுங்கள்

118, Tooting High Street
London SW 17 0RR
Tel : 020 8682 3777







வோல்த்தம்ஸ்ரோவில்

Kumarans
குமரன்ஸ்
TEXTILES

136, Hoe Street Walthamstow
London E17 4QR
Tel : 020 8521 3444
8530 3033
Fax : 020 8521 9444

New Mot Station Open !

CAPITAL AUTOS LTD.

CA

- Fully equipped M.O.T. & accident repair centre
- Insurance repairs welcome
- Recovery Service
- Approved insurance repairs
- Courtesy vehicle available For most repairs
- Professional friendly service and advice
- Collection & deliver within the local area

BMW MERCEDES
VAUXHALL
HONDA
VOLKSWAGEN
NISSAN Ford

இவர்களின்
விளம்பரத்தை
ttn
IBC
வானொலி
தொலைக்காட்சியில்
கேளுங்கள்

51A Milton Avenue
East Ham
London E6 18G
Tel : 020 8470 4789
Fax : 020 8472 2147
www.capitalauto.com

Accident Repair Centre &
General Services &
Repairs to all
Makes and Models





இலண்டனில் எந்த இடத்தில் இருந்தாலும்
உங்கள் வாகனத் திருத்த வேலைகளுக்கு
நீங்கள் செல்ல வேண்டிய இடம்

£ 10 OFF
Your M.O.T !

Hurry - Limited Offer !

Reg : ____________
Model : ____________
Name : ____________
Tel : ____________

BASED ON CURRENT M.O.T.FEE OF £42.10 • OUR VOUCHER PER CAR ONLY

## தம்பி 51

நேரில்
உன்முகம் பார்த்ததில்லை
நினைவில்
உன்முகம் மறந்ததில்லை

வயதில்
எனைவிடச் சிறியவன்நீ
வாழ்வில்
எவரிலும் பெரியவன்நீ

அறமும்
அகிம்சையும் தோற்றபின்னர்
அறவை
முறையே ஏற்றனை

ஆயுதம்
கைகளில் ஏந்திவந்தாய்
அக்கினி
ஆற்றில் நீந்திவந்தாய்

எத்தரின்
தலைகளை வாங்கியவன்
எத்தனை
துயரங்கள் தாங்கியதோள்!

அத்தனை
துயரிலும் உடன்நின்றார்
மொத்த
ஈழத் தமிழ்மக்கள்

இழந்தது
எதிரிகள் ஈனத்தனம்
விழந்தால்
வெல்லும் உன் ஈழத்தவம்

விரைவில்
இறுதிப் புயல்வீசும்
வேங்கைகள்
ஆள்வார் தமிழ்த்தேசம்!

– சுபவீ

# படித்ததில் பிடித்தது

–பதிப்பாசிரியர்

பற்றுக்க மாட்டாமல் பாழ்ப்புலம்புகின்றேன்
சுற்றுக்க மாட்டாமல் துயரத்தால் விம்முகிறேன்
சுற்றுச்சுவர் நடுவே சுமந்தாளே எனை ஒருத்தி - அவள்
சற்று விலகி இருந்தால் இன்று நானில்லை

கவியரசு கண்ணதாசன்

சாலையைக் கடக்கும்போது
முதல்முறையாகக் கரம்பற்றிக் கொண்டாய்
பத்திரமாக கடந்துவிட்டோம்
அப்போது விபத்துக்குள்ளாயிருந்தது
என் மனம்

- கவிஞர் ஏ. ராஜசேகர்

## ஊனப் புகழ்

ஒன்றாவது காலிருந்தால்
மூன்றுமொரு ஊனந்தான்
ஆறாவது விரலிருந்தால்
அதுவும் ஒரு ஊனந்தான்
ஒன்றுக்குப் பத்தாக
ஊரார் புகழ்வதெல்லாம்
ஊனப் புகழாகும்
உண்மையிலே இகழாகும்

- கவிஞர் பொன். செல்வகணபதி

எங்கள் தமிழ்மக்கள்
தொடர்ந்து
திரைப்படம் பார்க்கிறார்கள்
அடுத்த முதல்வரைத்
தேர்ந்தெடுப்பதற்காக

- கவிஞர் அறிவுமதி

## முரண்

ஏ.சி. காரில்
குளிர்ச்சியில்
ஓட்டுநர்
பருக்கத்தில்
முதலாளி
காருக்குள் இருவரும்!

- கவிஞர் சொல்கேளான்

தெற்கே தமிழனம்
விடுதலைத் தீ
மூட்டற்று நாம்.

- கவிஞர் ஆலா

வற்றிப்போவதானாலும்
இந்த மீனுக்கு
ஓடை போதும்
உன் கண்ணோரத்
தொட்டியில்
நீயிரு.

- கவிஞர் பச்சியப்பன்



மாதமிரு திருக்குறள் கற்போம்

### கயமை

**மக்களே போல்வர் கயவர் அவரன்ன**
**ஒப்பாரி யாங்கண்டது இல்.** ( குறள் : 1071 )

கயவர் என்பவர் மக்களைப் போலவே இருப்பார்கள் ; அவர் மக்களை ஒத்திருப்பது போன்ற ஒப்புமையை நாம் வேறு எந்தப் பொருளிடத்தும் கண்டதில்லை.

**நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்**
**நெஞ்சத்து அவலம் இலர்** ( குறள் : 1072 )

நன்மையை அறிபவர்களைவிட கயவர் நல்ல நிலையை உடையவராவர்; ஏனெனில், கயவர் தம் மனதில் கவலை இல்லாதவராவார்.



உலகம் முழுவதும் இந்து ஆலயங்களுக்கு சிலை வடிவமைப்பாளரான காலம் சென்ற தேவசேனாதிபதியின் குமாரர்கள் ராதாகிருஷ்ண ஸ்தபதி, ஸ்ரீகந்த ஸ்தபதி, சுவாமிநாத ஸ்தபதி ஆகியோருக்கு அகில இந்தியச் சிலைவடிப்புக்கு முதல்தரமானச் சிலை வடிவமைப்பாளர்கள் என்ற பரிசு கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் வடித்துள்ள சிலைகள் சிலவற்றை அட்டையில் காண்கிறீர்கள். இவை பல்வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. சுவாமிமலைக்குப் புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து பலகோடி ரூபாய்கள் இந்தச் சிலைகளுக்காக சென்று கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது

## தேசிய நினைவெழுச்சி நாள்
## கார்த்திகை 27





**MARKANDAN & SHARMA**
Solicitors & Administrators for Oaths
M. Markandan LL.B

BOW BUSINESS CENTRE 153-159 BOW ROAD
LONDON E3 2SE
TEL: 020 8981 5330 FAX: 020 8981 5350
MOBILE: 07956386576

**NATHAN & CHELVA**
Solicitors
M. Markandan LL.B

169 TOOTING HIGH STREET TOOTING
LONDON SW17 0SY
TEL: 020 8672 1800 FAX: 020 8672 0105
MOBILE: 07956386576

**AFFORDABLE RATES ! We are Open on Saturdays**
**Email : markandan@mssolicitors.com**

**CONVEYANCING SPECIALIST**
Fast, Efficient and Friendly services in
- ✓ Residential Conveyancing
- ✓ Commercial Conveyancing
- ✓ Re - Mortgages
- ✓ Liquor Licenses
- ✓ Company Registration

**We Win No Fee Basis**
**Employment Law**
**Personal Injury**

**IMMIGRATION SPECIALIST**
Free Initial Consultation on all Immigration matters
- ✓ Immigration / Asylum
- ✓ Police station visits
- ✓ Overseas Work Permits
- ✓ Working Holiday Maker visa
- ✓ Entry Clearance Appeals
- ✓ Sponsor Letters
- ✓ Power of Attorney
- ✓ Translations / Unmarried Certificates

# Link AIR

## Travels Limited



IATA 91-2 5704 0

SriLankan

*Special Fares to : Colombo, Madras, Singapore, Canada*

We can also arrange : COLOMBO - JAFFNA - COLOMBO

361 London Road, Croydon, Surrey CRO 3PB

Tel : 020 8665 0206 Fax : 020 8669 8579


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்


இலண்டன் மாநகரில்

# GALAXY NEWS

உங்களுக்குத் தேவையான
விரும்பிய நூல்களை ஒடருக்கு
உங்கள் வீட்டுக்கு அருகாமையில்
உள்ள தமிழ்க் கடைகளில்
பெற்றுக் கொள்ளலாம்

தொடர்புகளுக்கு
**Mr. K. Alagan**

## GALAXY NEWS

84, Brooks Croft Road
London E17 4JR
Tel : 07958 360 176
Fax : 020 8527 2324



# Mierra Jewellery Mart

## Gems & Jewellery

34 London Road Tooting London SW 17 9SP
Tel : 208 648 7750 www.meera_jewellery.com



பழைய தங்கத்தில் புத்தம்
புதிய நகைகள் செய்து கொள்ள
அதிர்ஷ்ட நவரத்தின கற்களை
நியாய விலையில் பெற்றுக்கொள்ள
உங்களுக்குத் தேவையான
22ct சிங்கப்பூர் நகைகளை
நியாய விலையில்
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

# உள்ளே இருக்கின்ற நல்லவன்

அது ஒரு பெரிய தொழிற்சாலை. தோல் பதனிடும் தொழிற்சாலை. ஒரு நாள் அங்கே பதப்படுத்தி வைத்திருந்த தோல்கள் கொஞ்சம் திருட்டுப் போய்விட்டன. அந்தத் தொழிற்சாலையின் முதலாளி என்ன செய்தார் தெரியுமா? காவல் துறையில் புகார் செய்யவில்லை.

பத்திரிகை அலுவலகம் ஒன்றிற்குச் சென்றார். அதிலே ஒரு விளம்பரம் கொடுத்தார். எப்படித் தெரியுமா?

'' எனக்குச் சொந்தமான தோல் கிடங்கிலிருந்து தோல்கள் திருட்டுப் போயிருக்கின்றன. ஒருக்கால் அதைத் திருடியவர் வறுமையின் காரணமாக அதைச் செய்திருந்தால் ஒன்று செய்யலாம். திருடிக் கொண்டு போன தோல்களைத் திரும்பக் கொண்டு வந்து கொடுக்கலாம். அவற்றை நான் திரும்பப் பெற்றுக் கொள்வேன். அந்தச் செய்தியை வெளியே சொல்ல மாட்டேன். அவர் பெயரையும் அவர் யார் என்பதையும் நான் ரகசியமாகவே வைத்துக் கொள்வேன்.

அது மட்டுமல்ல

அவர் நல்ல வழியில் பணம் சம்பாதிக்கவும் உதவ முடியும். ''

இதுதான் அவர் கொடுத்த விளம்பரம்.

இப்படியும் ஒரு தொழிலதிபரா என்று நமக்கு வியப்பாக இருக்கிறது.

இங்கிலாந்து நாட்டில் 17-ஆம் நூற்றாண்டில் இப்படி ஒருவர் இருந்தாராம். அவருக்கு ஒரு நம்பிக்கை உண்டாம். அதாவது எவ்வளவு மோசமான மனிதராக இருந்தாலும் அவர்களுக்குள்ளேயும் சில நல்ல குணங்கள் ஒளிந்திருக்கும். அதை வெளியே இழுத்து அவர்களை நல்ல வழிக்குக் கொண்டு வந்துவிடலாம்.

இது அவருடைய நம்பிக்கை.

ஆகவே இப்படி ஒரு விளம்பரத்தைக் கொடுத்துவிட்டுக் காத்திருந்தார். அவர் காத்திருந்தது வீண்போகவில்லை.

ஒருநாள் இரவு நேரம்.

அந்த வீட்டின் கதவு தட்டப்பட்டது.

தட்டப்பட்ட கதவுகள் திறக்கப்பட்டன

வெளியே -

முதுகில் மூட்டையைச் சுமந்துக் கொண்டு ஒரு மனிதன்.

'' வா உள்ளே '' என்றார் தொழிலதிபர்.

அவருக்குப் பின்னால் அவருடைய மனைவியின் முகம். இருவரும் அவனை அன்போடு உள்ளே அழைத்துப் போனார்கள். அப்புறம் கேட்டார்கள்.

'' என்ன விஷயம்? ''

'' நான் அவற்றையெல்லாம் திரும்பக் கொண்டு வந்திருக்கிறேன். ''

'' எவற்றை ? ''

'' ஏற்கனவே உங்கள் தொழிலகத்திலிருந்து நான் களவாடிச் சென்ற தோல்களைத் திரும்பக் கொண்டு வந்திருக்கிறேன். ''

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

முதுகிலிருந்த சுமை கீழே இறங்கியது. மனம் லேசாகியது.

'' பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்தேன். எனக்குள்ளேயிருந்த ஒன்று இப்படிச் செய்ய வேண்டும் என்ற முடிவு எடுத்தது அதுதான்... ''

அவர் ஒரு கை விளக்கை எடுத்துக் கொண்டார். அவன் மறுபடியும் அந்த மூட்டையைத் தூக்கிக் கொண்டான். அவர் வீட்டின் பின்புறம் சென்றார். இவனும் பின் தொடர்ந்தான். அங்கே தோல்கள் அடுக்கப்பட்டிருந்தன.

இவன் மூட்டையைப் பிரித்தான்.

மறுபடியும் ஒழுங்காகப் பழைய இடத்திலேயே அடுக்கி வைத்தான். இருவரும் வீட்டுக்குள் வந்தார்கள்.

அதற்குள்ளே அங்கே சிற்றுண்டியும் காபியும் தயாராக இருந்தது. அவன் வியப்போடு அதைப் பார்த்தான்.

அந்தப் பெண்மணி கூறினார்கள்.

'' உட்கார்ந்து சாப்பிடப்பா... உனக்காகத்தான் தயார் செய்தேன். பசியோட வந்திருக்கிறாய்... பார்த்தவுடனேயே புரிஞ்சிக்கிட்டேன். முகம் சோர்ந்துப் போயிருக்கிறது. சரி...சாப்பிடு. ''

கணப்பு அடுப்பு இதமான வெப்பத்தை வீசிக் கொண்டிருந்தது. அதை நோக்கி முகத்தைத் திருப்பிக் கொண்டான். அவன் கண்கள் கலங்கியிருந்தன.

'' இது மாதிரி செய்வேன்னு நான் நினைக்கவேயில்லை. இதுதான் என் முதல் திருட்டு. குடிப்பழக்கம் என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது. '' அவன் அழ ஆரம்பித்தான்.

'' அழாதே...! ''

அவன் தோளில் ஆதரவாக அவரின் கைகள்.

'' இதுவே உன்னுடைய கடைசித் திருட்டாகவும் இருக்கட்டும். இப்பவும் நீ எனக்கு ஒரு வாக்குறுதி கொடுப்பாயானால்... ''

அவன் நிமிர்ந்து அவர் முகத்தைப் பார்த்தான்.

'' அதாவது நீ இந்தக் குடிப்பழக்கத்தை விட்டு விடுவதாக வாக்களித்தால் உனக்கு இங்கேயே ஒரு வேலை போட்டுக் கொடுக்க முடியும். இதை நான் வெளியில் யாரிடமும் சொல்லவும் மாட்டேன். ''

அவன் தேம்பி அழத் தொடங்கி விட்டான்.

'' சரி... வா சாப்பிடு. ''

அவன் கையைப் பற்றிக் கூட்டிச் சென்று சாப்பாட்டு மேசையில் உட்கார வைத்தார். அவனால் சாப்பிட முடியவில்லை. கொஞ்சநேரம் அழுது தீர்க்கிறான். அதன் பிறகே அவனால் சாப்பிட முடிந்தது.

அவர் அவனை ஆதரவாகத் தட்டிக் கொடுக்கிறார்.

'' கவலைப்படாதே. இனி நான் உன் நண்பன். ''

அந்த மனிதனுடைய சிறகுகள் விரிய ஆரம்பிக்கின்றன.

மறுநாள்....

மதிப்புக்குரிய ஒரு தொழிலாளியாக அந்த மனிதன் அந்தத் தொழிலகத்தில் அடி எடுத்து வைக்கிறான். அவனும் கொடுத்த வாக்கைக் காப்பாற்றினான்.

ஆம்... அதன் பிறகு அவன் குடிப்பதில்லை.

அவரும் கொடுத்த வாக்கைக் காப்பாற்றினார். அந்த மனிதனின் பெயரை வெளியிடவே இல்லை. இன்று வரை அவன் பெயர் என்ன என்பது யாருக்குமே தெரியாது.

உள்ளே இருக்கிற நல்லவனை வெளியே கொண்டு வருவதுதான் உண்மையான விடுதலை.

ஒரு தொழிற்சாலை.

அங்கே ஓர் இடத்தில் '' இங்கே புகை பிடிக்கக் கூடாது '' என்ற அறிவிப்புப் பலகை.

அதன் அடியிலேயே நின்று ஒருவன் ஆனந்தமாக சிகரெட் பிடித்துக் கொண்டிருக்கிறான்.

அந்த வழியாக வந்த முதலாளி அவனைக் கவனித்துவிடுகிறார்.

உடனே மானேஜரைக் கூப்பிடுகிறார்.

'' அதோ அவன் கணக்கைத் தீர்த்து வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள் '' என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்.

உடனே சிலர் வருகிறார்கள்.

அவனை அழைத்துச் செல்கிறார்கள். கணக்குப் பார்க்கிறார்கள். 50 ஆயிரம் கையில் கொடுத்து வெளியே அனுப்பிவிடுகிறார்கள்.

அவன் வீதிக்கு வந்து விடுகிறான். கையில் பணம். ஏதோ யோசிக்கிறான்.

அந்த வழியாக வந்தவர் கேட்கிறார்.

'' என்னப்பா யோசனை ? ''

'' ஒண்ணுமில்லே. ... இந்த தொழிற்சாலையிலே வேலை செய்கிற என் நண்பனைப் பார்க்கறதுக்காக உள்ளே போனேன். என்னைச் சிலபேர் கூட்டிக்கிட்டுப் போனாங்க. ஏதோ கேள்விகள் கேட்டாங்க. கணக்குப் புத்தகத்தைப் புரட்டினாங்க. கையில ஐம்பதாயிரத்தைக் கொடுத்து அனுப்பிட்டாங்க. அதுதான் ஏன்னு தெரியலே.... யோசித்துக்கிட்டு நிக்கிறேன் ! ''

***


## மணமகள் தேவை

யாழ்ப்பர்ணதைப் பிறப்பிடமாகக் கொண்ட கொழும்பில் வாழும், 31 வயது 5'6'' உயர பொதுநிற, M.S.C. இறுதியாண்டில் கல்வி பயிலும், கிறிஸ்தவ மணமகனுக்கு U.K.க்கு sponser பண்ணக்கூடிய இந்து அல்லது கத்தோலிக்க அல்லது கிறிஸ்தவ மணமகள் தேவை. மேலதிக விபரங்கள் பிரபல திருமண ஆற்றுப்படுத்துநர் சுயதெரிவுமுறை முன்னோடி குரும்பசிட்டியூர் மாயெழு வேல்அமுதனிடம் விசாரித்தறிக!

**Ref No : VM 10240**

*விசாரணைக்கான நேரம்:*

திங்கள், புதன், வியாழன், வெள்ளி, கிழமைநாட்களில் இலங்கை நேரம் மாலைமணி 4.30 - 8.30 வரை

தொலைபேசி : 0094112360488

தொலைபேசி / தொலைநகல்: 0034114514396

*விரும்பவோர் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி*

Reputed Marriage Facilator & Selection System
Forerunner Kurupasidiyoor Maayalu VelAmudhan
8 / 3 / 3, Metro Apartments,
[ Opposite Wellawatta police, via 33rd Lane ]
55th Lane, Colombo-06, Srilanka.



## Chellappa & Co. Ltd.

**LEGAL CONSULTANCY, ACCOUNTANCY & TAX SERVICES**

**Legal** : We have expertise with many years experience in providing excellent advise and assistance in respect of all legal matters including civil litigation.

பல வருட அனுபவமும் திறமையும் உள்ள சட்ட ஆலோசகர்களினால் சகலவிதமான சட்டத் தேவைகளுக்குமான ஆலோசனைகளை வழங்குவதுடன், அதற்கான உதவிகளையும் உங்கள் திருப்திகேற்ப சட்ட வரையறைக்குட்பட்டு மிகச் சிறந்த முறையில், குறைந்த செலவில் உடனுக்குடன் செய்து தரவுள்ளோம். எனவே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

**Accountancy** : We offer a fast, friendly and reliable accounting service for small and meidum sized businesses including preparation of VAT, TAX returns and Annual Accounts.


நீண்டகால அனுபவமும் தொழில் நுட்பமும் தெரிந்த கணக்காளர்களும், கணக்குப் பதிவாளர்களும், உங்கள் வர்த்தக ஸ்தாபனங்களின் கணக்கியல் சேவைகளை மிகத் துரிதமாகவும் நேர்த்தியாகவும் செய்து தருவதற்கு உடனே எங்களை நாடுங்கள்.

*Special allowance will be given for start-up business, contact us for friendly advice*

**Mr K Chelva-Nayagam LLB**
Manager
**Mob : 07956 466 708**
265 Haydons Road Wimbledon London SW19 8TY
Tel : 020 8542 7111 Fax : 020 8542 9770
Email: chellappa@tiscali.co.uk

# குறுகத் தரித்த குறள்

## சுப. வீரபாண்டியன்



உலகில் பிறந்த எல்லோருக்கும் கடமைகள் உள்ளன. அவரவர் கடமைகளை அவரவர் தவறாமல் செய்திடல் வேண்டும் என்று நீதி நூல்கள் உரைக்கின்றன.

எனினும், கடமை என்றால் என்ன, எந்தச் செயல் யாருக்குரியது என்பன போன்ற வரையறைகளில் வேறுபாடுகள் உள்ளன. தனிப்பட்ட தங்களின் வாழ்க்கை நெறிகளைப் பேணுவது, தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுவது போன்றவைகளே, நம் கடமைகளாக உணரப்படுகின்றன. இவைகள் நம் கடமைகளே என்பதில் மறுப்பில்லை. ஆனால் இவைகள் மட்டும்தான் நம் கடமைகளா என்ற வினா எழுகின்றது.

இயல்பான மனிதர்கள் பலர் இந்தக் கடமைகளைக் கூட ஆற்றாமல் இருக்கும் இவ்வுலகில், இவற்றையேனும் ஆற்றும் மனிதர்களை நாம் குறை சொல்ல முடியாது. ஆனால், தன் வீடு, தன் பிள்ளை, தன் குடும்பம் என்னும் சுற்றுச் சுவர்களைத் தாண்டி வருபவர்களே சான்றோர்கள் என்கின்றார் வள்ளுவர்.

அவ்வாறாயின், சான்றோர்களின் கடமைகள் யாவை என்று கேட்கத் தோன்றுகிறது. இதற்கு ஒற்றை வரியில் விடை தருகிறது திருக்குறள்.

'' கடன் என்ப நல்லவை எல்லாம் '' (எண். 981) என்னும் திருக்குறள் வரி, ஏராளமான செய்திகளை ஏந்தி வருகிறது. நம் வீட்டில், நாம் வாழும் ஊரில், நம் உலகில் செய்யப்பட வேண்டிய நல்ல செயல்கள் அனைத்தும் தங்களின் கடமை என்று கருதுவோரைச் சான்றோர் என்கிறார் வள்ளுவர்.

இந்த எண்ணம் கொண்ட சான்றோர்கள் மிக அருகிவிட்ட காரணத்தினால்தான், எல்லோருக்கும் உரிய பொது வேலைகள் யாருடைய வேலையாகவும் இல்லாமல் போய்விட்டன. தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருக்கும் மனிதர்களே இன்று பெருகி விட்டனர். அப்படி இருப்பதே சிறந்தது என்றும், அவர்களே எந்த வம்புக்கும் போகாத நல்லவர்கள் என்றும் சமூகத்தில் பலரும் கருதுகின்றனர். ஆனால் உண்மையோ வேறு மாதிரியானது.

தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருப்பவர்கள், தன்னலம் மிக்கவர்கள். அவர்களால் சமூகத்திற்கு எந்த நன்மையும் இல்லை. எல்லோரும் தங்கள் வேலைகளையே பார்த்துக் கொண்டிருந்தால் பொது வேலைகளை யார் கவனிப்பார்கள்.

மக்களுக்கு நல்ல கருத்துக்களைச் சொல்லக் கூடிய கலை, இலக்கியம், ஆகியனவற்றை வளர்ப்பது, அதற்காக ஒரு பத்திரிகை நடத்துவது, ஏழை, எளிய மக்களின் முன்னேற்றத்திற்கு உதவுவது முதலான அனைத்து நல்லவையும், நம் கடமைகள் என்று உணர வேண்டும்.

கடன் என்ற சொல்லிற்குக் கடமை என்று பொருள் கொண்டு மேலே உள்ள செய்திகளைக் கண்டோம். பேராசிரியர் மு. வரதராசனார், கடன் என்பதற்குப் பிறர்பால் பெற்ற கடன் என்று பொருள் கொண்டு, உரை கூறுகின்றார். '' நாம் பிறர்பால் பெற்ற உணவு, உடை, அறிவு, இன்பம், அனைத்தையும் பிறரிடம் பெற்றோம் என்ற உணர்ச்சியோடு அவற்றை நாமும் பிறருக்குச் செய்து வாழ வேண்டும் '', என்பது அவர் உரை.

இவ்வுரை நயம் மிக்கதாக உள்ளபோதும், கடன் என்ற சொல்லுக்குக் கடமை என்ற பொருளே பொருத்தமாக உள்ளது.

'' கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு ''

என்னும் குறள் கற்கும் நாம், நல்லவை எல்லாவற்றையும் நம் கடமையாக ஏற்போம்.

நல்லவை எல்லாம் நம் கடன் என்று ஏற்றபின், கடமைகள் முடிவதில்லை. நம் காலம் வரையிலும், நம் காலம் தாண்டியும் கடமைகள் தொடர்கின்றன.

கடமைகள் பெரிது, நம் வாழ்நாள் சிறிது ! ●

# காளிக்கு பயந்தது ஏன் ?

ஒரு காலத்தில் காளிகோயில், துர்க்கை கோயில் என்றால் அதன் பக்கமே யாரும் போக மாட்டார்கள். அது பலி வாங்கி விடும், ரத்தத்தைக் குடித்து விடும், என்றெல்லாம் வதந்திகள் பரப்பப்பட்டதுண்டு. இந்த வதந்திக்குக் காரணமானவர்கள் யார் தெரியுமா? சாட்சாத் நம்ம பஞ்ச பாண்டவர்கள் தான். துரியோதனனிடம் சூதாடி நாட்டை இழந்தனர். அது மட்டுமின்றி, அவர்கள் காட்டுக்குச் சென்று 12 ஆண்டுகள் யார் கண்ணிலும் படாமல் வாழ வேண்டிய நிலையும் ஏற்பட்டது. தவ முனிவர்களைத் தவிர மற்றவர் கண்ணில் பட்டால், அவர்களின் வனவாசம் மேலும் நீட்டிக்கப்படும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டிருந்தது. அர்ஜுனன் தனது வலிமை மிக்க ஆயுதங்களை ஒரு வன்னி மரத்தின் புதரில் ஒளித்து வைத்தான். காலம் வரும்போது அவற்றை எடுத்துக் கொள்ளலாம் என இருந்தனர். அந்த வன்னிமரம்தான் அவர்கள் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்த ஆயுதங்களைப் பாதுகாக்கும் பெட்டகமாக இருந்தது. அவர்கள் முனிவர்களின் ஆலோசனையின் பேரில், துர்க்கை அல்லது காளியின் இருப்பிடமான குகைகளில் மறைந்து வாழ்ந்தார்கள். அந்தக் கோயில்களுக்குள் பயந்து போய் யாரும் நுழைவதில்லை. பாண்டவர்களுக்கு இது வசதியாயிற்று. அஞ்சாநெஞ்சம் கொண்ட அவர்களைப் பாராட்டிப் பராசக்தியின் வடிவமான அந்த காளி தேவியே காட்சி கொடுத்தாள். காளியின் காட்சியை மனக்கண்ணால் கண்டால் கூட போதும். அவர்களை துன்பம் தொடராது. ஏழ்மை என்பதே இருக்காது. துக்கம், பயம் இதெல்லாம் நெருங்காது.



மகரிஷிகளால் உபதேசிக்கப்பட்ட 27 ஸ்லோகம் கொண்ட துர்க்கா நட்சத்திர மாலிகா ஸ்துதியை பக்தியுடன் ஒன்பது இரவுகள் சொன்னார்கள். அந்த இரவுகளே நவராத்திரி ஆயிற்று. அவர்களை அவள் ஆசீர்வதித்தாள். வெற்றிக்கு துணை நின்றாள்.

# காளி வழிபாட்டின் வளர்ச்சி

ஒரு காலத்தில் காளி கோயில் என்றாலே பில்லி சூன்யம் வைக்கும் கோயில், மந்திரவாதிகளின் புகலிடம் என்ற எண்ணம் இருந்தது. எனவே, இந்தக் கோயில்களின் பக்கம் யாரும் செல்வதில்லை. மகா காளியின் உருவமும் விகாரமாக இருந்தது. இவள் பராசக்தியின் அவதாரமாக கண்ணனுக்கு முன் பிறந்தவள். கம்சனை எச்சரித்தவள். கண்ணனிடம் அவள், நாராயணா! நான் தெய்வமாக இருந்தும் என்னை யாரும் வணங்குவதில்லையே, பயந்து ஓடுகிறார்களே! என்னை வழிபடும் காலம் எப்போது வரும்? எனக் கேட்டாள்.

அதற்கு நாராயணன் கலியுகத்தில் மக்கள் பாவங்களை உச்சமாகச் செய்வார்கள். பூஜை புனஸ்காரங்கள் கூட பணத்துக்காகத்தான் நடக்கும். பணமுள்ளவனுக்கே கோயில் என்ற நிலைமை உருவாகும். உண்மையான பக்தி இருக்காது. பெண்கள் ஆண்களால் வேட்டையாடப்படுவார்கள்.

சில பெண்களும் ஆண்களை வேட்டையாடுவார்கள். ஒழுக்கமற்ற சூழல் உருவாகும். பெற்றவர்கள் பிள்ளைகளாலும், பிள்ளைகள் பெற்றவர்களாலும் வெறுக்கப்படுவார்கள். கொலை, கொள்ளை என உலகமே அல்லோலப்படும். உன் உருவத்தை விட விகாரமான செயல்களில் மனிதன் ஈடுபடுவான்.தைரியம் நிறைந்தவனாக பிறர்முன் காட்டிக்கொண்டாலும் உள்ளுக்குள் பயந்து கொண்டே வாழ்வான். அப்போது பயங்கரமான வடிவுடைய உன்னை வணங்கி, தன்னைப் பாதுகாக்கும்படி கேட்பான். உனக்கு பூஜை, புனஸ்காரங்கள் அதிகமாகும் என்றார்.

இப்போது அப்படித்தானே நடக்கிறது. மிக மிக உயரமான பிரத்யங்கிரா சிலைகள், காளி சிலைகள் எங்கும் அமைக்கப்படுகின்றன. மனிதனும் வணங்குகிறான்.

நன்றி : தினமலர்

# அறிவாய் நெஞ்சே

— முதற்சித்தன் —

கூசாமல் கேள்விகளைக் கேட்பா ருண்டு !
கூறுகின்ற பதிலெல்லாம் விளங்கா ருண்டு !
கூசாமல் பொய்களவு புரிவோ ரன்றோ
குவலயத்தில் வளமாக இருக்கின் றார்கள் !
ஏசாமல் ஏசுகின்றாய் உள்ளத் துள்ளே
எந்நாளும் ஒருநாளாய் இருப்ப தில்லை !
கூசாமல் கூறுகின்ற பொய்யர் எல்லாம்
கெட்டழிந்து கதியிழப்பர் அறிவாய் நெஞ்சே !

வீணுக்கு சென்மமது எடுக்க லாமோ?
விளங்காமல் பேசுவதால் பயனு முண்டோ?
வீணுக்கு விழலுக்கு நீரைப் பாய்ச்சி
விளைவின்றி வருந்துவதில் பயனு முண்டோ ?
ஊனுக்கு உணவுக்கு உறங்கிச் செத்த
உடலுக்கு உயிருந்தும் மதிப்பு முண்டோ?
வீணுக்கு உபதேசம் கூறும் கூட்டம்
விவேகத்தை மறப்பதற்கும் விளக்க முண்டோ ?

பெண்ணாசை கொண்டிங்கு வாழும் மாந்தர்
பொருளுக்குப் பொல்லாத செயலைச் செய்வார்
கண்ணாலே பார்க்கின்றோம் ! சிறந்தா ரில்லை
கவலைக்குள் ஆளாகி வாழ்வார் நாளும் !
உண்பதற்கு உழைக்காமல் சுகமே கேட்பர்
உயர்வதற்கு வழிகாண முயற்சி செய்யார்
மண்பதர்கள் இவரெல்லாம் இந்த நாட்டில்
பகலுறங்கி இரவலையும் கள்வர் தாமே !

எடுத்துவிட்ட பிறவியில் நீந்து தற்கு
எடுத்தவுடல் உயிராலே முடியும் நெஞ்சே !
எடுத்துவிட்ட காற்றதனை அடக்கம் செய்தால்
எடுத்தவுடல் உயிரோடு நிலைக்கு மென்பர் !
எடுத்தவந்த பற்றதனை அகற்றி விட்டால்
எடுத்தவுடல் மனத்தினிலே களங்க மில்லை!
எடுத்துவந்த செல்வமென எதுவு மில்லை
எடுத்தேக எதுவுமில்லை அறிவாய் நெஞ்சே !

வளரும்

பெண் அன்பின் உறைவிடம். அன்னையின் வடிவம். இந்த அகிலத்தையே உருவாக்கியவள். உலகத்திலே முதல் முதல் தோன்றியவளும் பெண்தான். ஏவாள் முதல் சுந்தரி வரை.

பெண்ணைப் புகழாத கவிஞர்களோ, எழுத்தாளர்களோ கிடையாது. ஆனால் இவர்கள் வீடுகளில் கூட பெண்களின் கால்களிலே விலங்கு ! பொன் விலங்கு ! ஒரு கலைப் பொருளாக, கருப்பொருளாக, ஒரு காட்சிப் பொருளாக பெண்ணைப் புகழின் உச்சியிலே வைத்துக் கொண்டாடுவார்கள். ஆனால், ஒரு பெண்ணினது அடிப்படை உரிமைகளைக் கூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இவர்கள் எல்லாம் ஞான வியாபாரிகள் அல்லவா ? இவர்கள் நிலையே இப்படி என்றால், ஒரு பாமரனின் நிலையை...

நான் அருணாசலம். வயது முப்பது. எனது மனைவி சிவகாமசுந்தரி. நான் ஒரு ஞான வியாபாரி கிடையாது. உலகப் பந்தத்திலே மூழ்கித் துடித்துக் கொண்டிருக்கும் ஒரு சிறு புழு அவ்வளவுதான். நாங்கள் நகமும் சதையும்போல அல்ல, பூவும் மணமும் போல அல்ல. வீணையும் நாதமும் போல அல்ல. அருணாச்சலமும் சுந்தரியும் போல வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம்.

புருசலட்சணம் தொழில் என்பார்கள். எனக்கும் ஒரு தொழில் இருக்கு. அதாவது கொழும்பு றேடியோக்களில் பெண்களிடம் வேலையைப் பற்றிக்கேட்கும்போது நான் '' ஹவுஸ் வைவ் '' என்பார்களே அதைப் போல '' ஹவுஸ் கஸ்பென்ட். '' நானும் உயர்தரம் வரை படிச்சேன். அரசாங்க வேலைக்காகக் காத்து இருந்தேன். எதுகுமே கிடைக்கேல்லை. யாழ்ப்பாணத்தில் பிறந்ததாலையோ என்னவோ சுயமாகத்தான் முன்னேறவேண்டி இருந்தது. ஒரு யுத்த சூழ்நிலையிலை, பொருளாதாரக் கட்டுப்பாட்டுக்கு மத்தியிலை என்னத்தைச் செய்து என்னத்தை....?

அப்பு எப்பவுமே '' படிச்சியோ? ரியூசனுக்கு போனியோ? '' என்று கேட்கமாட்டார். '' மாடு கட்டினியோ? தோட்டத்துக்குப் போனியோ? '' என்றுதான் கேட்பார். அப்படிப்பட்ட மணவெட்டி பிடித்த என்னை இந்தத் திருமணப் பந்தத்துக்கை தள்ளிவிட்டினம்.

சுந்தரி ஒரு கணிதப் பட்டதாரி. அதோடை உயர் படிப்பு, வங்கியிலே உத்தியோகம், கம்பியூட்டர் அது, இது எண்டு நிறையவே படிக்கின்றாள். ஆனால், பாவம் அவளுக்கு தோதான மாப்பிள்ளைதான் கிடைக்கவில்லை போலை. யாழ்ப்பாணத்தில் உயர்தரம் படிக்காத பெண்களே இப்போ கிடையாது. எல்லோருமே படிக்கினம் போட்டி போடுகினம். எனவே, இங்கே நிலவுகிற மாப்பிள்ளைப் பஞ்சத்தாலே என்னை அவளின்ரை தலையிலை கட்டிவிட்டினம். '' தாரமும் குருவும் தலைவிதிப்படி '' என்பினம். அதனாலை சுந்தரியோடை சேர்ந்து இல்லறத்தை நல்லறமாக்கத் தொடங்கியிருந்தேன்.

எங்கடை வாழ்க்கை நேற்றுவரை அமைதியாகவும், ஆனந்தமாகவும்தான் போய்க்கொண்டு இருந்தது. திடீரென்று ஒரு புயல். இப்போ சில தினங்களாகேவே சுந்தரி என்கூட முகம்கொடுத்துப் பேசுவதேயில்லை. ஏதோ, ஒரு கோபம், அலட்சியம். ஏதாவது கேட்டால் எரிந்து விழுந்தாள்.

'' சீ '' இவளுக்கு என்ன நடந்தது? ஒரே நேரத்தில் இருவருமே வெடிச்சால் சேதம் அதிகம் என்பதால் நான் கொஞ்சம் அடக்கி வாசித்துக் கொண்டேன். நாம் கோபப்படுகிற போது அறிவு எம்மைவிட்டு ! போய்விடுகின்றதாம். புலன்கள் கட்டுமீறி வார்த்தைகள் சூடாகப் பறக்கும். அப்போதுதான் விசரன், பேயன், பிசாசு என்றெல்லாம் அன்புவார்த்தை பேசுவார்கள். அதன்பின் கோபம் மறைந்த பிறகு அந்த அன்பு வார்த்தைகளை மீளப்பெற முடியுமோ? நான் ஒன்பது மாதத்திலை பிறந்ததாலே என்னை ஒரு அவசரக்குடுக்கை என்பினம். ஆனால், நான் ஒரு ஆறுதல் குடுக்கை. சரி சுந்தரியின் கோபம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் பார்த்துவிடுவோம் என்று இருந்துவிட்டேன்.

'' மச்சான் படிச்ச பொம்பிளையள் புருசனை மதிக்க மாட்டினம் '' என்றான் கரன். '' அப்படியென்றால் படிச்ச புருசன்மார் பெண்சாதியை மதிக்கிறதில்லை எண்டுதானே அர்த்தம். '' நான் கொஞ்சம் வில்லங்கமாகவும் பேசுவேன். அவன் பின்வாங்கிக் கொண்டான். சுந்தரிக்கு இதிலே எந்தவித வருத்தமும் கிடையாது. அவளுக்கு ஒரு மாப்பிள்ளை தேவைப்பட்டது அவ்வளவுதான். தொழிலைப் பற்றியோ, படிப்பைப் பற்றியோ அவள் கவனிக்கவில்லை.

அவளுக்குப் பின்னால் ஒரு பட்டம் இருப்பதைப் போல எனக்குப் பின்னாலும் ஒரு பட்டம் உண்டு. அதை எந்தப் பல்கலைக்கழகமும் கொடுக்கவில்லை. ஊர்ச்சனங்கள்தான் கொடுத்து இருந்தார்கள். அதுதான் '' நல்லபொடியன் ''. அந்தப் பட்டத்தை நம்பித்தான் சுந்தரி எனக்கு கழுத்தை நீட்டினாள். சிலர் என் காதுபடவே சொல்லுவார்கள். '' பெண்சாதி சம்பாதித்தால் கருத்து வேற்றுமை இருக்கும். ஈகோ இருக்கும் '' என்றெல்லாம். எனக்கு அது பற்றியெல்லாம் எதுகுமே தெரியாது. ஆனால், பகவத்கீதை கொஞ்சம் தெரியும். அதில் '' கர்மயோகம் '' என்ற பகுதி ! '' இந்த உலகத்திலே பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு கடமையுண்டு. மனம் விரும்பினாலும் வெறுக்கினும் பொருட்படுத்தாமல் கடமையில் நிலைதடுமாறாது நிற்பவனே சிறந்த கடமைவீரன் ஆவான். '' ஏதோ எனக்குரிய கடமைகள் எல்லாம் வகுக்கப்பட்டதைப் போல ஒரு உணர்வு. எனது குடும்பம் சரியாக இயங்க வேணடுமானால் நான் இப்போ என்ன செய்யவேண்டும் என்பது பற்றியே அதிகமாகச் சிந்திக்க வேண்டியிருந்தது.

எங்கள் கல்யாணம் முடிந்த அடுத்த மாதமே சுந்தரிக்கு கொழும்பில் உயர்பதவி. எல்லாம் என் ராசிதான் என்றார்கள். பெட்டி படுக்கையோடு கொழும்பு வந்து சேர்ந்தோம். ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டோம். சுந்தரி வலுவிண்ணி. கொழும்புவுக்கே தண்ணி காட்டுவாள். இங்கிலீசை முறுக்குச் சப்புவது போல பேசுவாள். எனக்குத்தான் மிதிச்சாலும் வராது. சின்னனிலை '' ஹஸ்பென்டை '' '' குஸ்பென்ட் '' என்று வாசித்து வாங்கிக் கட்டிக்கொண்டன். ஆனால் கையளவு உப்புப் போடுவதில் இருந்து காஞ்சிபுரம் சேலை கட்டுவது வரை எல்லாமே வரும். சுந்தரிக்குத்தான் சரியாகப் புடவை கட்டக்கூட

**– இணுவில் உத்திரன்**

# மாதர் தம்மை...

தெரியாது. ஒரு நாள் சேலை கட்டக்காட்டிக் கொடுத்தன். சேலையைச் சுற்றிக் கொண்டுவந்து கொசுவம் வைத்து இடுப்புக்குள் சொருகியபோது சுந்தரி கூச்சத்தில் கத்திவிட அயலட்டைகள் எல்லாம் பொல்லுகள் தடியளோடை வந்திட்டுதுகள் அதுக்குப் பிறகு சேலை கட்டுற தெண்டாலே சுந்தரிக்கு வெட்கம்தான்.

அவளுக்குத் தெரிஞ்சதெல்லாம் தேங்காய்ப்பூவோடை சீனியைப் போட்டு ஒரு அல்வா செய்வாள். அப்படி அல்வா செய்யிறபோதெல்லாம் எங்கடை வீட்டுப்பக்கம் யாருமே வருவதில்லை. எங்கை தங்களை அல்வா சாப்பிட சொல்லி விடுவாளோ என்ற பயம் அவர்களுக்கு. ஆனால், சுந்தரிக்கு உடுப்புகளை அயன் பண்ணுவது மட்டும் தெரியும். அந்த வேலை மட்டும் எனக்கு கனவிலையும் வராது. ஏனென்றால் நாங்கள் கந்தையானாலும் கசக்கிக்கட்டும் பரம்பரை. ஒருநாள் சுந்தரியின்ரை அன்பேசிவம் சாரியை நான் அயன் பண்ணத் தொடங்கி அந்தச் சாறி கருகினதுதான் மிச்சம். சுந்தரி நீ உந்த சாறியைக் கட்டினால் சிம்ரன் மாதிரி இருக்கிறாய் என்று யாரோ ஒவ்வீசிலை சொன்னவையாம். அதனாலை சுந்தரிக்கு சரியான மன வருத்தம். சுந்தரிக்கு எந்தவிதமான வீட்டுவேலையும் தெரியாமல் போனதிற்கு காரணம் அவளை படிப்பிலையே முழுநேரமும் ஈடுபடுத்தி இருக்கின்றார்கள் அவளுடைய பெற்றோர்.

காலையிலே சுந்தரி உதவி செய்வாள். ஒரு பிரட்டல், பொரியலுடன், சோறு வடித்து பார்சல் செய்து கொடுப்பேன். இரவிலே புட்டு, தோசை என்று இருவருமே செய்து சாப்பிடுவோம். ஒரு நாள் நான் மட்டும் புட்டு அவிக்கப்போவதாக கிச்சினுக்குள் நுழைந்தாள் சுந்தரி ! கொஞ்ச நேரத்துக்குப் பிறகு போய்ப் பார்த்தாள் நீத்துப்பெட்டியும், புட்டும் சுடுதண்ணீர் சருவத்துக்குள்ளே நீந்திக்கொண்டு இருக்கின்றன. அன்று நாங்கள் களிதான் கிண்டிச் சாப்பிட்டம். அவளுக்குக் கற்றுக் கொள்ள விருப்பம்தான். ஆனால் நான்தான் கிச்சின் பக்கமே வரக்கூடாது என்று உத்தரவு போட்டுவிட்டேன்.

சுந்தரி பாவம். வேலைச்சுமை, உடல்களைப்பு, உயர் படிப்பு, இதுக்குள்ளே வீட்டுவேலையை எப்படிச்செய்ய முடியும்? இரவிலும் படித்துக்கொண்டுதான் இருப்பாள். என் பொழுதுபோக்கு புத்தகம் படிப்பதுதான்.

கல்விக்கும் அறிவுக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் இருக்கிறது. '' அறிவு என்றால் என்ன? '' எழுத்தாளர் சுஜாதாவே வரைவிலக்கணப்படுத்துகின்றார். அதாவது, '' சூழ்நிலைக்குத் தக்க வாறான ஒரு நடத்தை '' அவ்வளவுதான். அதைத்தானே நானும் செய்துகொண்டு இருக்கின்றேன். அவளை காலையில் அலுவலகத்தில் சேர்ப்பதும் மாலையில் அழைத்துவருவதும் கூட எனது பணிதான். அதற்காக ஒரு '' ஹீரோ கொண்டா '' வைச்சு இருக்கிறன். எனக்கு மோட்டார் சைக்கிள் நல்லாய் ஓட்டத் தெரிஞ்சாலும் தனியாகப் போவதில்லை. காரணம் பயம்தான். ஒருநாள் வெள்ளைத் தொப்பிக்காரன் '' கோயிதென்னே? '' என்று சிங்களத்தில் கேட்டதற்கு '' ஐயாம் மிஸ்டர் அருணாச்சலம் '' என்று பதில் சொல்லி ஒரே கசமுச. பிறகு சுந்தரிதான் விலக்கு தீர்த்து விட்டாள்.

திறந்த மனதோடு கூடிய மனசை நெருக்கம் என்கின்றார்கள். இங்கு ஒருவரிடம் இருந்து மற்றவர் எதையுமே பெற முயற்சிப்பதில்லை. ஒருவரை ஒருவர் வெற்றி கொள்ள முயற்சிப்பதில்லை. இங்கு அரவணைப்பு அதிகமாக இருக்குமாம். ஆனால், இதையெல்லாம் எனது குடும்பத்தோடு என்றைக்குமே ஒப்பிட்டுப் பார்த்ததில்லை. அதற்கான அவசியமும் ஏற்படவில்லை.

ஒரு குடும்பத்தைக் கொண்டு நடத்துவது ஆணா? பெண்ணா? ஒரு முக்கிய முடிவினை எடுக்க வேண்டியவர் யார்? இப்படியான விவாதங்கள் எல்லாம் இன்று தொடர்ந்தபடிதான் இருக்கின்றன. இதுவொரு பொதுவான பிரச்சனையே அல்ல. அவரவர் குடும்ப சூழ்நிலையைப் பொருத்துத் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயம், கணவன் மனைவி இடையேயான ஆற்றலைப் பொறுத்த விடயம். இதையெல்லாம் ஏன் ஒரு விவாதமாக்கி மண்டையைப போட்டு உடைத்துக் கொள்கின்றார்களோ தெரியவில்லை. ஏதோ கணவனும், மனைவியும் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் போல. இருவருமே ஒரே கட்சிதானே. குடும்பக்கட்சி.

எனது குடும்பத்தை பொறுத்தவரை சுந்தரி என்கூட ஆலோசித்துத்தான் சில தீர்மானங்களை எடுப்பாள். இதையெல்லாம் நான் வெளியே கூறினால் சிலர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். '' வீட்டுக்கு ஆண்தான் முதல்வன் '' என்பார்கள். '' பெண்கள் ஆண்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும் அதுதான் கற்பு. அதுதான் பதிபக்தி '' என்ற நினைப்பு அவர்களுக்கு. பெண்ணுரிமையைப் பற்றியெல்லாம் சிந்திக்காவிட்டாலும் பெண்கள் சம்பந்தமான சில பிற்போக்குத்தனங்களையாவது விட்டுவிடலாமே! கணவன் சாப்பிட்ட எச்சில் இலையில் மனைவியும் சாப்பிட்டுத்தான் தன் பதிபக்தியை நிலைநாட்ட வேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. நாங்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வோம். சேர்ந்து சாப்பிடுவோம். குறை நிறைகளைச் சொல்லிக் கொள்வோம். திருத்திக்கொள்வோம். இன்றைக்கு எங்கள் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள பெண்களைப் பொறுத்தவரை படிக்கிறார்கள். பல்கலைக்கழகம் போகின்றார்கள். ஏன் ஆயுதம் ஏந்திப் போராடுகின்றார்கள் ! அதாவது, இங்கு ஆண்களுக்கு பெண்கள் சரியாக ஈடுகொடுக்கின்றார்கள். என்னுடைய நண்பர்களில் சிலர் கூட '' நீ ஒரு பெண்டாட்டி தாசன் '' என்று கூறுவார்கள். அவர்களைப் பொறுத்தவரை வீட்டுக்குள்ளே வீரம் பேசுபவன் மனைவியை அடிமையாக நடத்துபவன்தான் ஆண்பிள்ளை! அவர்களுடைய பார்வையில் நான் ஒரு அப்பாவி! யோக்கர்! ஏன் தெனாலி என்றும் கூறுகின்றார்கள்.

சுந்தரிக்கு நான் இப்படி வீட்டுவேலைகள் செய்வதையிட்டு மனவருத்தம் உண்டு. '' உங்களுக்கு கஷ்டம் என்றால் விட்டு விடுங்கோ '' என்பாள். நான்தான் அவளை சமாதானப்படுத்துவேன்.

பல ஆண்களின் முன்னேற்றத்துக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாளேயானால் ஒரு பெண்ணின் வளர்ச்சிக்குப் பின்னால் ஏன் ஒரு ஆண் இருக்கக்கூடாது. என்னால் முடியாது போன ஒரு முன்னேற்றத்தை எனது மனைவி மூலமாவது நிறைவேற்றிக் கொள்ளலாமே! ஒரு கணவனின் மகிழ்ச்சியில் மனைவி பெருமைப் பட்டுக்கொள்ள முடியுமேயானால் ஒரு மனைவியின் முன்னேற்றத்தில் கணவன் ஏன் பெருமைப் பட்டுக்கொள்ள கூடாது? இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் பெண்களே தங்களைத் தாழ்த்திக் கொண்டதுதான்.

இப்போதெல்லாம் அவர்களுக்குள் ஏதோவொரு '' சுப்பிரியாரிட்டிக் கொம்பிளெக்ஸ் '' உருவாகியிருக்குது. இது ஆரோக்கியமானதொரு விசயம். சில பெண்கள் அமைப்புக்கள் பெண்களின் உரிமைகளை எல்லாம் ஆண்களிடம் கேட்டு ஏன்தான் தங்களையே பலவீனப்படுத்திக் கொள்கிறார்களோ தெரியவில்லை. பெண்களுக்கு உரிமை கொடுக்க ஆண்கள் யார்? கேட்டுப் பெறுவதில்லையே உரிமை ! அவர்கள் கல்வி தொழில்துறைகளில் எல்லாம் நல்லதொரு நிலைக்கு வரும்போது உரிமைகளும் தானாகவே வந்துகொள்கின்றன.

அன்றைய தினம் சுந்தரி வேலைக்குக்கூட போகவில்லை. கட்டிலில் கிடந்து அழுதுகொண்டு '' சீ '' எனக்கும் மனம் கேட்கவில்லை.

'' சுந்தரி என்ன விஷயம். சுகமில்லையோ? '' பதில் இல்லை.

'' சுந்தரி எந்தவொரு மனஸ்தாபத்தையும் வெளிப்படையாக மனம் திறந்து பேசறதாலை தீர்த்துக்கொள்ளலாம் '' என்று கூறியபோது விக்கி விக்கி அழத் தொடங்கினாள்.

'' நீ இப்போ கொஞ்ச நாளாயே சரியாய் இல்லை. சொல்லு என்ன பிரச்சனை? '' கண்ணைத் திறந்துகொண்டு எழுந்து உட்கார்ந்தாள்...

'' எனக்கு படிப்பு வேண்டாம். தொழில் வேண்டாம். ஊருக்குப் போய்விடுவம் '' என்று கூறியபடி மீண்டும் அழத் தொடங்கினாள். ஒருவாறு அவளைச் சமாதானம் செய்துகொண்டு விஷயத்தைக் கேட்டேன்.

போன வாரம் நடந்த '' கெற் ருகெதர் '' பாட்டியிலை என்ன பேசிச்சினம் தெரியுமோ?

'' தெரியல்லை! அவையள் இங்கிலிஸிலை எல்லோ பேசிச்சினம், சிரிச்சினம் '' என்றேன்.

'' என்ரை ஒவ்வீசிலை வேலை செய்யிறவை உங்களைக் கிண்டல் செய்தினம். நீங்கள் குக்கராம் ! என்னை ஏத்தி இறக்கிற றைவராம் ! நீங்கள் டவுசர் போட்ட வைபாம் ! உங்களை மிஸ்டர் சுந்தரி எண்டு கேலிசெய்யினம். இப்பெல்லாம் ஒவ்வொரு நாளுமே குத்தல் கதைகளும், நையாண்டிகளும், நகைப்புகளும்தான். என்னாலை எனிமேல் ஒவ்வீசுக்கு போகமுடியாது. எனக்கு இந்த நகர வாழ்க்கையே பிடிக்கேல்லை. எதுகுமே வேண்டாம். ஊருக்குப் போவம். தோட்டம் செய்தாவது பிழைத்துக் கொள்ளலாம் '' அழுதாள். முதல்நாள் பள்ளிக்குப் போகும் குழந்தையைப்போல அழுதாள். அவள் அழுதுமுடியும் வரை காத்திருந்தேன்.

சுந்தரி ஒரு வைரக்கல். அதைப் பட்டை தீட்டி ஒளிரப் பண்ண வேண்டியது எனது கடமை இப்போ அவள் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறாள்.

'' சுந்தரி இதுதானே விஷயம் ! இது நகரம் இங்கை எல்லாமே வேஷம்தான். ஒவ்வொருவர் வீட்டிலையும் ஆயிரம் கூத்தைகள் இருக்கும். அதைவிட்டு விட்டு அடுத்தவனின்ரை குடும்பத்தைப் பற்றிக் கதைக்கிறதிலை சிலருக்கு ஒரு சந்தோஷம். இவையிலை எல்லாம் கணக்கிலை எடுத்தால் நாங்கள் வாழேலாது. எப்படிப் பார்த்தாலும் உன்ரை மனவேதனைக்குக் காரணம் நீதான் '' என்று கூறியபோது என்னை நிமிர்ந்து பார்த்தாள்.

'' ஓம் சுந்தரி, எங்கடை அனுமதி இல்லாமல் கூட எங்கடை உடலை இன்னொருத்தராலை காயப்படுத்த முடியும். ஆனால், மனதை காயப்படுத்த முடியாது. உன்ரை மனசை அவர்களிட்டை இழந்தது உன்ரை தவறுதான். இதோ பார் சுந்தரி நாங்கள் யாருக்கும் கெடுதல் செய்யேல்லை. யாரையும் சுரண்டியும் வாழ வில்லை. சுயமாக உழைச்சு வாழுறம். என்னுடைய கடமைகளை நானும். உன்ரை கடமைகளை நீயும் சரியாகத்தான் செய்யிறம். அதுதான் முக்கியம். சுந்தரி என்னாலை ஒரு வேலைக்குப் போக முடியும். மூட்டை தூக்கியாவது சம்பாதிப்பேன். ஆனால். அதனாலை உன்னுடைய முன்னேற்றம் எங்கை பாதிக்கப்பட்டுவிடுமோ என்றுதான் யோசிக்கிறன். சுந்தரி உன்ரை முன்னேற்றத்துக்காக நான் உனக்கு ஒத்துழைப்பைக் கொடுக்கிறன். இதிலை என்ன தவறு இருக்க முடியும்? நீ மேலும் படிக்கவேணும். உயரவேணும். உன்னைக் கிண்டல் செய்யிறவை மூக்கிலை விரலை வைக்க வேணும். அதுதான் என்னுடைய விருப்பமும் கூட யார் என்ன சொன்னாலும் நீ அதைக் காதிலை வாங்கிக் கொள்ளாதை. நாங்கள் சிரிச்சுக் கொண்டே வாழுவம். வாழ்ந்து காட்டுவம் '' என்று கூறியபோது அவளுடைய முகத்தில் ஒரு திருப்தி! சந்தோஷம்!! அப்படியே என் மார்பிலே முகம் புதைத்தாள். எங்கள் பனிப்போர் முடிவுற்றது. அவளை அப்படியே அணைத்தபடியே '' சுந்தரி நீயும் சுந்தரன் நானும் '' என்று பாடியபோது வெட்கத்துடன் அறைக்குள் ஓடிவிட்டாள் வேலைக்குப் புறப்படுவதற்காக. கடந்த ஒரு வாரத்திற்குப் பிறகு எங்கள் கெடுபிடி யுத்தம் முடிவுற்றது. இன்றுதான் மனம் கொஞ்சம் அமைதியாய் இருந்தது. சத்தியமாய் சொல்கின்றேன் இப்போதெல்லாம் நான் அவளுக்கு சேலை கட்டி விடுவதேயில்லை.

> **'' ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று**
> **எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்**
> **வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற**
> **விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். ''**
>
> -பாரதி

நன்றி : நிறங்கள்
சிறுகதைத் தொகுப்பு

# Best Foods

## Supermarket

**Over 500 Items at reduced price 15.11.05 - 15.12.05**

259 - 261 London Road
West Croydon
Surrey CRO 2RL
020 8684 6269

364 - 366 Bath Road
Hounslow
Middlesex TW4 7HT
020 8577 6002

249 Northholt Road
South Harrow
HA2 8HN
020 8423 9933




Subject to availability

# SPECIAL OFFERS




Offers from 15.11.05 to 15.12.05

Subject to availability

# Buy 2 - Get 1 Free




Offers from 15.11.05 to 15.12.05

# SPECIAL OFFERS




5 FOR £ 1.00

BUY ANY 4
FOR £ 1.00




3 FOR £ 1.00




6 FOR £ 1.00







4 FOR £ 3.00

2 FOR £ 1.50






5 FOR £ 1.00

BUY ANY 4
FOR £ 2.00




Subject to availability

Offers from 15.11.05 to 15.12.05

# SPECIAL OFFERS




1 Kg 79 p

1 Kg 79 p







3 FOR £ 1.00

99 P







2 FOR £ 3.00

3 FOR £ 1.00







79 P

59 P



Subject to availability


Offers from 15.11.05 to 15.12.05

# SPECIAL OFFERS




Subject to availability

Offers from 15.11.05 to 15.12.05



வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
JK Gold House
&
Fashion House
314-316 London Road Croydon
Surrey CRO 2TJ
020 8684 4577
Fax : 022 8684 4677
குழந்தைகள்
முதல்
பெரியவர்கள்
அனைவருக்கும்
தேவையான
அனைத்து
ஆடைகளுக்கும்...

# JK Gold House & Fashion House

314-316 London Road Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577 Fax : 022 8684 4677

மங்கையரின்
மனம்
கவரும்
பொன்னகை
கொட்டிக்
கிடக்கிறது...



அனைவருக்கும்
எங்கள் மனமார்ந்த
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்

# கருத்துக் கணிப்பு

கருத்துக் கணிப்புக்கு 2000 பிரதிகள் மட்டுமே வினியோகிக்கப்பட்டிருந்தது. வாசகர்கள் போதிய ஆர்வம் காட்டாத காரணத்தால் இம்முறை 4000 பிரதிகளை விநியோகிக்கிறோம். நாங்கள் எதிர்பார்த்த அளவு வாசகர்கள் ஆர்வம் காட்டவில்லை என்ற ஆதங்கம் இருந்தாலும், கிடைத்ததில் எங்களை கவர்ந்த கணிப்பு பிரசுரமாகி உள்ளது.

Mrs. Puvanam Dharmaratnam
45, Alfriston Avenue
North Harrow Middlesex
HA2 7DY

1. தமிழர் தகவலின் முகப்பின் அமைப்பு எங்களைக் கவர்கிறது.
2. அதில் எழுத்துப் பிழைகள் இல்லை.
3. அதன் உள் கட்டமைப்பு, குறை சொல்வதற்கில்லை.
4. கணிணி அமைப்பும் அதன் தெரிவும் நன்றாக உள்ளன.
5. ஆசிரியர் தலையங்கம் சூப்பராக உள்ளது.
6. செய்திச் சிதறல்கள், கருத்துக் கவிதைகள் கட்டாயம் அறியவேண்டியது.
7. விளம்பர அமைப்பும், அதன் மாற்றமும் என்றால் ஆகஸ்ட் மாதம் வெளிவந்த சஞ்சிகையில் மிகவும் தெளிவாக உள்ளது.
8. ஆக்கங்கள் சமூகத் தேவைக்கு அவசியம்.
9. சோதிடம் பயன் உண்டு.
10. உரிய காலத்தில் கிடைக்கின்றது.
11. Food and Wine - South Harrowஅல்லது Best Food - South Harrow கடைகளில் பெற்றுக் கொள்வோம்.
12. நான் தமிழர் தகவலுக்கு எழுதியது உண்டு, எழுத ஆர்வம்.
    1. July 2005 - சொர்க்கமே என்றாலும் நம் ஊரைப் போல வருமா ? என்ற சம்பாஷணை
    2. தமிழர்களே! தமிழை மறக்கலாமா ? என்ற பொன்மொழிகள்
13. கடையில் உள்ள தரத்தைப் பார்த்து வாங்குபவர்கள் மிகக் குறைவு
14. இயந்திர வாழ்க்கையில் பொருட்களின் தரத்தைப் பார்த்து வாங்குவதற்கு மக்களுக்கு ஒன்று பொறுமையில்லை அடுத்தது நேரம் கிடைப்பது இல்லை.
15. தரத்தையும், ஈர்ப்பையும் கவனிப்போமானால் ஒரு முறை பாவித்த பின்புதான் கூற முடியும். ஒருமுறை நன்றாக வரும். அடுத்த முறை அதே மாதிரி இருப்பதில்லை.
16. --------------------
17. --------------------
18. இலண்டனில் வெளிவரும் பத்திரிகைகளில் மிகவும் பிடித்தது வீரகேசரி. காரணம் தாயகப் புதினம் யாவும் அடங்கி வருகின்றன. சஞ்சிகை என்றால் மங்கையர் மலர், அவள், சிநேகிதி, குமுதம், கல்கி, தமிழர் தகவல், தமிழ் உலகம் என்றால் சிந்தனையை வளர்க்கும் சஞ்சிகை. பல தெரியாத விஷயங்களை குறிப்பிடுகிறார்கள். மற்றைய சஞ்சிகைகளை விட இதில் வைத்தியக் குறிப்புகள், சமையல் குறிப்புகள், சாதனைகள் என வருவதால் என்னை மிகவும் கவர்கிறது. அத்துடன் நான் ஒரு வாசிப்பு பழக்கம் உள்ள வாசகி என்பதனால் வேறு எந்த சஞ்சிகை கையில் கிடைத்தாலும் வாசிப்பது உண்டு.
19. அதிகம் பிரசுரமாகும் பேப்பர் என்றால் வீரகேசரி, இலவச பேப்பர்கள்.
20. இலண்டனில் நடக்கும் கலாச்சாரங்களுக்கு அநேகமாக செல்வதுண்டு.
21. தாயகத்தை நினைவுபடுத்தும் உணவு சாலைகள் - Jaffna House, Amma Restaurant, Palm Beach, Yaana Ealing, Priya East Ham, Sindhu Mahal East ham
22. நாங்கள் அநேகமாக பாவிக்கும் மிளகாய்த் தூள் Kings Curry Powder
    1. தமிழ்க் கடைகளில் கூடுதலாகக் கிடைக்கிறது.
    2. நாம் பாவித்த அளவில் சுமாராக உள்ளது.

23. நடனங்கள் என்றால் பரதநாட்டியம் விரும்பிப் பார்ப்பது உண்டு. நாடகங்கள் என்றால் தீபம் தொலைக்காட்சியில் வரும் நாடகங்கள் பார்ப்பது உண்டு. நாடகங்கள் எல்லாம் குடும்பம், பிள்ளைகள் என ஒன்றாக இருந்து பார்ப்பது கஷ்டம். கல்கி, செல்வி, கீதாஞ்சலி

24. தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் என்றால் நல்ல கதை அம்சம் உள்ள குடும்பப் பாங்கான பிள்ளைகளுக்கு உகந்த பாடங்கள், நாடகங்கள் என வந்தால் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு உண்டாகும். இதைப் புரிந்து எல்லா தயாரிப்பாளர்களும், இயக்குனர்களும் செயலாற்ற வேண்டும். எல்லாம் இவர்கள் கையில்தான் உண்டு.

நன்றி !

திருமதி. புவனம் தர்மரட்ணம்
லண்டன் (ஹரோ)

---

127, Caledon Road
Eastham, LONDON
E62HA

தமிழர் தகவல்
ஆசிரியர்

அன்புடையீர்

ஐக்கிய ராஜ்யத்தில் நம்மவர் மூவர் மேயராக வந்திருப்பதை அட்டையில் பிரசுரித்தமைக்காக எனது வாழ்த்துக்கள் உரித்தாகுக. ஒன்றே குலம் ஒருவனே தலைவன் அவன் வழி செல்வோம் போன்ற மாதமிரு திருக்குறளையும் விளக்கத்தையும் பிரசுரிப்பதால் நாம் பாடசாலையில் படிக்கத் தவறியதை அறியக்கூடியதாக உள்ளது. நன்றி.

தமிழர் தகவலைத் தொடர்ந்து படித்து வரும் வாசகர்களில் நானும் ஒருத்தி. தமிழர் தகவல் ஆசிரியரை இன்று லண்டன் பூராவும் மக்கள் அறிவர். புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு புதிய நவீன இலக்கியப் படைப்புகளை அறிமுகப்படுத்தும் உங்களுக்கு எமது நன்றி.

செப்டம்பர் 2005 தகவலில் உங்கள் தீர்ப்புகள் தீர்வுகளாகவில்லை என்ற கருத்து மறந்திருந்த சம்பவங்களை மீட்க உதவியுள்ளது. அதில் கோல்புறாக் ஆணைக்குழு, சோல்பிரபுவின் 29 –C மிட்டோம். தமிழ் பத்திரிகைகள் வெளியிடும் முன் நீங்கள் முதல் முதலாக நீரிழிவு நோய்க்கு புதிய மருந்தை எழுதி எம்மை அறிய வைத்ததை மெச்சுகிறேன்.

மிக நாகரிகமிக்க விஷயங்களைத் தகவல் தவறாமல் தருவதால் உங்களுக்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

வாழ்க தமிழர் தகவல், வாழ்க ஆசிரியர் !

---

பூனையின் பல் கருணைக்கு இருப்பிடமா? கொடூரத்துக்கு இருப்பிடமா என்ற கேள்வி சர்ச்சைக்குரியது. பூனைக்குட்டிக்கு அது கருணையின் இருப்பிடம். ஏனெனில் அந்தப் பற்கள் குட்டியை கவ்விச் செல்ல உதவும். ஆனால் எலிக்கோ கொடூரத்தின் இருப்பிடம். இதுபோல்தான் உலகம் நல்லதா, கெட்டதா என்பதும் சர்ச்சைக்குரியது. உலகத்தை கடவுள் மயமாக காண்பவனுக்கு அது நல்லது. மற்றவனுக்கு அது கெட்டது.

- தாயுமானவர்

## வரலாறு காணாத மழை

தமிழ்நாடு முழுவதும் 60 ஆண்டுகளுக்குப் பிறகு இப்படி ஒரு மழையை காணமுடிந்தது

## 2006 பொங்கல் மலர்

வணிக மலராக வெளிவர இருப்பதால் வணிக சம்பந்தமான ஆக்கங்களையும், லண்டனில் வணிகம் எப்படி உள்ளது என்ற கருத்துக்களையும் எங்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

விளம்பரதாரர் தமிழர் தகவலுடன் இணைந்து ஆதரவு தரலாமே...

## மலிவு விலையில் பொருட்களை வாங்குவது எப்படி?

சென்ற வாரம் அறிவித்திருந்தோம். அந்த விளம்பரத்துக்கு ஏற்ற வகையில் லண்டன் **BEST FOOD** நிறுவனத்தார் 8 பக்கங்கள் மலிவு விலையில் பொருட்களை விளம்பரப்படுத்தி உள்ளார்கள். இது போல் எல்லா நிறுவனமும் பின்பற்றலாமே...

## குறுக்கெழுத்துப் போட்டி

போதிய அளவு வாசகர்கள் ஆர்வம் காட்டாததினால் குறுக்கெழுத்துப் போட்டியை நிறுத்திவிட்டோம். இதுவரை கலந்து கொண்டவர்களுக்கு எங்கள் நன்றி

## திருச்செந்தூர் முருகனின் மகிமை



இந்த கார்த்திகை மாதம் 2ஆம் தேதியிலிருந்து 7ஆம் தேதி மட்டும் சகல துன்பத்திலிருந்தும் காக்க கந்த ஷஷ்டி விரதமே சாலச்சிறந்தது. ஷஷ்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்பதுதான் உண்மையான பழமொழி. திருச்செந்தூர் முருகனை இந்தக் காலங்களில் வழிப்பட்டால் நிச்சயம் குழுந்தை பாக்கியம் உண்டாகும். ஆயிரமாயிரம் குடும்பங்கள் இப்படி குழந்தை பாக்கியம் பெற்றது வரலாற்று உண்மை.

## பிரபல எழுத்தாளர் சுந்தர ராமசாமி அமெரிக்காவில் மரணம்

பிரபல எழுத்தாளர் சுந்தர ராமசாமி நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்டு அமெரிக்க மருத்துவமனையில் நேற்று அதிகாலை மரணமடைந்தார். அவருக்கு வயது 76.

நாகர்யோயிலைச் சேர்ந்தவர் சுந்தர ராமசாமி. இலக்கியப் படைப்புத் துறையில் முக்கியத்துவம் பெற்ற எழுத்தாளர். கவிதை, சிறுகதை, கட்டுரை, நாவல், மொழிபெயர்ப்பு எனறு பல்வேறு துறைகளிலும் சிறப்பாகப் பணியாற்றியவர். படைப்பாற்றலால் இலக்கிய ரசிகர்களைக் கவர்ந்தவர்.

கடந்த மார்ச் மாதக் கடைசியில், தனது மகள்களுடன் வசிக்க அமெரிக்கா சென்றார். மூத்த மகள் டாக்டர் தங்கு வீட்டில் தங்கியிருந்தபோது அவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டது. கலிபோர்னியாவில் உள்ள டொமினிக்கன் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். நுரையீரல் செயலிழந்ததால் மூச்சுத் திணறலில் அவதிப்பட்ட அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். சிகிச்சை பலன் இன்றி அவர் உயிர் பிரிந்தது. அவரது உடல் நாகர்கோயிலுக்கு கொண்டுவரப்பட்டு இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டன.


எழுத்தாளர் சுந்தர ராமசாமி தமிழ்ப் படைப்புலகில் அனைவராலும் நேசிக்கப்பட்டவர். அவரது எழுத்துப்பணி கடந்த 51ஆம் ஆண்டு துவங்கியது. பிரபல மலையாள எழுத்தாளர் தகழி சிவசங்கரம்பிள்ளை எழுதிய தோட்டியின் மகன் நாவலைத் தமிழில் மொழிபெயர்த்தார். எழுத்தாளர் புதுமைப்பித்தனுக்கு ஒரு நினைவு மலர் வெளியிட்டார். புளியமரத்தின் கதை என்ற நாவலை எழுதிப் பிரபலமானார். பிரபல மலையாள நாவல் செம்மீனைத் தமிழில் மொழிபெயர்த்தவர்.

மூன்று நாவல்கள், 65 சிறுகதைகள், 108 கவிதைகள் மற்றும் ஏராளமான கட்டுரைகள் மற்றும் மொழிபெயர்ப்புகள் செய்துள்ளார். முறையான கல்வி பயிற்சி பெறாத சுந்தர ராமசாமி தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மொழிகளை நன்கு அறிந்தவர். மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இலக்கிய சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். காலச்சுவடு என்ற இலக்கிய இதழைத் துவங்கி நடத்தி வந்தார். இவரது பல்வேறு படைப்புகள் பல்வேறு மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இவரது இலக்கியத் திறனைப் பாராட்டி கடந்த 88ஆம் ஆண்டு குமரன் ஆசான் நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. வாழ்நாள் இலக்கியப் பணிக்காக டொரன்டோ பல்கலைக் கழகம் இவருக்கு இயல் விருது வழங்கியது. கடந்த 2003ஆம் ஆண்டு சிறந்த படைப்பாளிக்கான கதா அமைப்பின் சூடாமணி விருது வழங்கப்பட்டது.

சுந்தர ராமசாமி 1931ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் தேதி பிறந்தார். நாகர்கோவிலில் ஜவுளிக்கடையை நிர்வகித்துக் கொண்டே இலக்கியப் பணிகளையும் செய்து வந்தார். இவரது மனைவி பெயர் கமலா. மகன் எஸ். ஆர். சுந்தரம் (எ) கண்ணன். மகள்கள் டாக்டர் தங்கு, தைலா ஆகியோர் அமெரிக்காவில் வசிக்கின்றனர்.

நாய்கள் தங்கள் வாழ்வின் மூலமே நமக்குச் சில பாடங்களைக் கற்றுக் கொடுக்கின்றன. அவை என்ன தெரியுமா?

- பிரியமானவர்கள் வரும்போது ஓடிச் சென்று வரவேற்புக் கொடுங்கள்.
- உங்கள் பக்கம் காற்று வீசும்போது கண்கள் மூடிப் பரவசமாய் அனுபவியுங்கள்.
- உங்கள் நலனுக்காகச் சொல்லப்படும் விஷயங்களுக்கு அடிபணியுங்கள்.
- எதிரிகள் உங்கள் எல்லைக்குள் பிரவேசித்தால் உடனே மிரட்டுங்கள், விரட்டுங்கள்.
- உற்சாகமாய், அங்குமிங்கும் ஓடியாடுங்கள்.
- பிறர் கவனத்தைக் கவர முயலுங்கள்.
- பிறரைத் தொடுங்கள், பிறர் உங்களைத் தொட விடுங்கள்.
- வேண்டியவர்களையும் வேண்டாதவர்களையும் பார்வையிலேயே கண்டுபிடியுங்கள்.
- மற்றவர்களை அச்சப்படுத்த அவசியம் நேர்ந்தால் ஓர் உறுமலே போதும்.
- நிறையத் தண்ணீர் குடியுங்கள். நிழலில் ஒதுங்கும் நேரங்களை அனுபவியுங்கள்.
- சந்தோஷமாய் இருப்பதை ஆடிக்காட்டி, அசைவுகள் வழியே தெரிவியுங்கள்.
- பிறர் என்னதான் திட்டினாலும், அவர்கள் வேண்டியவர்களாயிருந்தால் மறுபடி நட்புக் கொள்ளுங்கள்.
- நீண்ட தூரம் நடந்து செல்வதில் ஆர்வம் காணுங்கள்
- உற்சாகமாகச் சாப்பிடுங்கள். போதும் என்றால் உடனே நிறுத்துங்கள்.
- உண்மையாய் இருங்கள், நம்பகமாய் இருங்கள்
- நீங்கள் தேடுகிற விஷயம் புதைத்து வைக்கப்பட்டிருந்தாலும் தோண்டி எடுங்கள்.
- தூங்கும் போதும் விழிப்புணர்வுடன் இருங்கள்.
- உங்கள் அன்புக்குரியவர்கள் வருத்தத்தில் இருக்கும்போது, அமைதியாய்ப் பக்கத்தில் அமர்ந்திருங்கள்.



மரபில் ஊறிய சங்கீதத்தை கேட்க வேண்டுமா? மாபெரும் கலைமாமணி **மணக்கால் ரங்கராஜன்** வழங்கும் மாபெரும் இசைக்கச்சேரி லண்டனில் மார்கழி, தை மாதங்களில் நடைபெற உள்ளது. 81 வயது அகவை உடைய இவர் இலண்டனில் இசை கச்சேரி நடத்துவதற்கு இசைந்துள்ளார். கர்நாடக இசைப் பிரியர்கள் இந்த நிகழ்ச்சியை கேட்க ஒரு அரிய சந்தர்ப்பத்தை பத்மநாப ஐயா அவர்கள் ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறார். இது பற்றிய விபரம் அறிய அவரிடம் தொடர்பு கொள்ளவும்.

அவரது தொலைபேசி இலக்கம் : 0208 472 8323

# தூக்கு மேடையில் பகத்சிங்

சர் ஜார்ஜ் சைமனின் தலைமையில் சைமன் கமிஷனின் குழுவினர் மும்பை வந்திறங்கியபோது, நாடெங்கும் ஹர்த்தால் நடைபெற்றது. ' சைமன் ! திரும்பிப் போ ! ' என்று கோஷமிட்டு ஆரவாரம் செய்தனர் மக்கள்.

லாகூருக்கு விஜயம் செய்தனர் சைமன் குழுவினர். அங்கே எதிர்ப்புக்கான ஆர்ப்பாட்டங்களை ' பஞ்சாப் சிங்கம் ' லாலா லஜ்பத்ராய் ஏற்படுத்தியிருந்தார். அப்போது லாகூரில போலீஸ் படை அதிகாரிகள் மூன்று பேரும் வெள்ளைக்காரர்கள். ஜில்லா சூப்பரிண்டென்டென்டாக ஸ்காட், உதவி சூப்பிரின்டென்டென்ட் சாண்டர்ஸ், துணை சூப்பிரின்டென்டென்ட் மாரிஸ் மூவரும் இரக்கமற்ற கல்நெஞ்சக்காரர்கள்.

கறுப்புக்கொடிகள் தாங்கிய பல்லாயிரம் மக்கள் லாகூர் தெருக்களில் ' சைமன் ! திரும்பிப்போ ! ' என்று கோஷமிட்டபடியே ஊர்வலம் சென்றனர். தலைமை தாங்கிச் சென்றார் லஜ்பத்ராய்.

அப்போது ஒரு சம்பவம் நடந்தது. முன்பின் அறிமுகமில்லாத ஒரு நபர் வந்தார். ' சைமன் ! திரும்பிப் போ ' என்று சாக்பீசால் எழுதியிருந்த ஒரு கறுப்புக் குடையை லஜ்பத்ராயிடம் அவர் கொடுத்துவிட்டு மறைந்தார். இதன் மர்மம் பின்னால் தான் வெளியாயிற்று. லாலா லஜ்பத்ராயை அடையாளம் காட்ட ஏகாதிபத்தியத்தின் ' அனுதாபிகள் ' செய்த பண்பற்ற செய்கையே இது.

அதிகாரிகளான ஸ்காட்டும், சாண்டர்ஸும் போலீஸ் உதவியால் இந்த ஆர்ப்பாட்டத்தை தடுத்து நிறுத்த முயன்றனர். தடியடியும் நடந்தது. லாலா லஜ்பத்ராயை ஈவிரக்கம் இல்லாமல் தடியால் அடித்துத் தாக்கினர். ஆபத்தான நிலையில் அன்பர்கள் அவரை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்றனர். உடல் தேறி வந்த அவர், கொஞ்ச நாட்களில் மரணமடைந்துவிட்டார்.

தேசபந்து சித்தரஞ்சன் தாஸின் மனைவி வசந்தி இந்த சமயத்தில் ஒரு மேடையில் பேசினார். ' பாரத நாட்டில் வீர இளைஞர்கள் இன்னமும் உயிருடன் இருக்கிறார்களா? அப்படியானால் அவர்கள் ஏன் இன்னமும் லஜ்பத்ராய்க்கு இழைக்கப் பெற்ற அநீதியைக் கண்டும் சும்மா இருக்கிறார்கள்? இந்த அவமானத்தைச் சகித்துக் கொள்ளும் மான உணர்ச்சி அற்றவர்களா இந்த நாட்டு மக்கள்? '

வசந்தி தேவியின் சவால் நிகழ்ந்து முப்பதே நாட்களுக்குள் அதற்கு விடை கிடைத்தது. சூப்பிரின்டென்டென்ட் சாண்டர்ஸ் தமது ஜில்லா போலீஸ் அலுவலகத்திலிருந்து மாலை நான்கு மணிக்கு ஒரு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, ஒரு திருப்பத்தில் சாண்டர்ஸைக் குறி பார்த்து இளைஞர் ஒருவர் மின் வெட்டு நேரத்தில் சுட்டு விட்டு ஓடினார்.

குண்டுக்கு இலக்கான உடனே கீழே விழுந்தான் சாண்டர்ஸ். பின்னால் வந்து கொண்டிருந்த சானன் சிங் என்ற ஹெட் கான்ஸ்டபிளும், போக்குவரத்து அதிகாரி பெர்ன் என்பவனும் அந்த இளைஞரைப் பின் தொடர்ந்து ஓடினர். ஆனால், ஒரு மறைவிடத்தில் கூட்டமாயிருந்த வேறு சில வாலிபர்களுடன் அந்த இளைஞரும் போய்ச் சேர்ந்துக் கொண்டார். அந்த இளைஞர்கள் அனைவரும் சேர்ந்து போலீஸ் அதிகாரிகளைச் சுடலாயினர்.

ஒரு குண்டு பெர்ன் மீது பாய்ந்து விடவே, அவனை ஹெட் கான்ஸ்டபிள் கைத்தாங்கலாகத் தாங்கினான். அடுத்த குண்டு சானன் சிங் மீது பாய்ந்தது. இளைஞர்கள் ஓடி மறைந்தனர். சானன்சிங் ஆஸ்பத்திரியிலேயே இறந்து போனான். அந்த வாலிபர்கள் உபயோகித்த லைசென்ஸ் இல்லாத மாஸர் பிஸ்டல் ஒன்று அந்த ஸ்தலத்திலிருந்து போலீசாருக்குக் கிடைத்தது. இந்தப் பிஸ்டல் தான் பின்னால் இந்த வாலிபர்கலைக் காட்டிக் கொடுக்கும் புண்ணியத்தைக் கட்டிக்கொண்டது.

மறுநாள் இறந்து போனான் சாண்டர்ஸ். அன்று மாலையில் லாகூர் நகரில் பல இடங்களில் சில சுவரொட்டி விளம்பரங்கள் உருதுவில் தென்பட்டன. ' சாண்டர்ஸ் வீழ்ந்தான்! லாலாஜியைக் கொன்றவனைப் பழி தீர்த்துக் கொண்டோம் ' என்று அவற்றில் எழுதியிருந்தது. சாக்கட்டியாலும் சில இடங்களில் இந்த வாசகம் எழுதியிருந்தது.

இந்தச் சம்பவம் பஞ்சாப் போலீஸ் இலாகாவையே பேரதிர்ச்சி அடையச் செய்தது. நான்கு மாத காலம் போலீசார் எப்படி எப்படியோ சல்லடை போட்டுச் சலித்தும் அவர்களுக்கு ஒரு ருசுவும் கிடைக்கவில்லை.

ஏப்ரல் 8, 1929இல் புதுடில்லியில் விட்டல்பாய் பட்டேல் தலைமையில் சட்டசபை கூடியது. சைமன் கமிஷனைச் சேர்ந்த உறுப்பினர் சிலரும் வந்திருந்தனர். கூட்டம் கூடிச் சிறிது நேரமே ஆகியிருக்கும்.பார்வையாளர்களின் காலரியில் அமர்ந்திருந்த இரண்டு இளைஞர்கள் அப்போது ஒரு வெடிகுண்டைச் சட்டசபை அறையினுள் வீசியெறிந்தனர்.

வெடிகுண்டை வீசிவிட்டு அந்த இருவரும் ' இன்குலாப் ஜிந்தாபாத் ' என்று உரக்கக் கூவியதோடு. இந்துஸ்தான் சோஷலிஸ்ட் ரிபப்ளிகன் படையினர் வெளியிட்ட நோட்டீஸ்களையும் சரமாரியாக வீசினர்.

அந்த இரண்டு இளைஞர்களைப் போலீசார் உடனே பிடித்து விட்டனர். அவர்களின் பெயர்கள் பகத்சிங், படுகேஸ்வர தத் என்று அறிந்தனர். அந்த இருவர் மீதும் ஜில்லா மாஜிஸ்ரேட்டின் முன்னிலையில் வழக்கு நடைபெற்றது. இருவருக்கும் நீதிபதி தீவாந்திர தண்டனை விதித்தார்.

பகத்சிங்கைக் கைது செய்த பின் அவரை சோதனையிட்ட போலீசார் அவரிடமிருந்து ஒரு பிஸ்டலைக் கைப்பற்றினர். இந்த பிஸ்டல்தான் சாண்டர்ஸ் கொலையில் பிரயோகிக்கப்பட்டது என்று நிபுணர்கள் கண்டு பிடித்தனர்.

அதுமட்டமல்ல, சாண்டர்ஸ் கொலையுண்ட அன்று மாலையில் சுவர்களில் சாக்பீசில் எழுதியிருந்த எழுத்தும், பகத்சிங்கின் கையெழுத்தும் ஒரே நபருடையவை என்றும் கண்டுபிடித்தனர். போலீஸ் பகத்சிங் கூட்டத்தினரை சித்ரவதை செய்தது.

அதைத் தாளாமல் ஜெயகோபால், ஹான்ஸ்ராஜ் என்ற இரண்டு வாலிபர்கள் ' 'அப்ரூவர் 'களாக மாறிவிட்டனர். அவர்களின் உதவியால் மேலும் 30 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். மாஜிஸ்திரேட் உத்தரவுப்படி இவர்களை அரசியல் சம்பந்தம் இல்லாத இதர பயங்கர குற்றவாளிகளோடு ஒரே சிறையில் காவலில் வைத்தனர்.

ஈவிரக்கமற்ற முறையில் இவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டதால் கைதிகள் அனைவரும் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். மற்ற கைதிகள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டுவிட்டனர். யதீந்திரநாத் என்ற இளைஞர் மட்டும் விடாமல் தொடர்ந்து உண்ணா நோன்பிருந்து 64ஆம் நாள் உயிரை விட்டார்.

அப்ரூவர் ஜெய்கோபால் கோர்ட்டில் கூறிய விபரம் இது. எங்கள் கூட்டத்தினரின் இலக்கில் விழுந்திருந்த போலீஸ் அதிகாரியை டிசம்பர் 17ஆம் தேதி (1928) காலையிலிருந்து நான் கண்காணித்து வந்தேன்.

காலை பத்து மணிக்கு ஓர் ஆங்கில போலீஸ் அதிகாரி சிவப்பு மோட்டார் சைக்கிளிலிருந்து இறங்கிப் போலீஸ் அலுவலகத்தினுள் நுழைந்ததைக் கண்டேன். அந்த அதிகாரியை நான் ஸ்காட் என்று தவறாக நினைத்து விட்டேன். ஸ்காட்டைக் கொல்லத்தான் எங்கள கூட்டத்தினர் திட்டமிட்டிருந்தனர்.

நான் கண்காணித்துவந்த வந்த அதிகாரி அந்த போலீஸ் அலுவலகத்தினுள் நுழைந்ததும், நான் எங்கள் கூட்டத்தினரின் திட்டப்படி பகத்சிங், ராஜகுரு, ஆசாத் இந்த மூவருக்கும் ' குறிப்பிட்ட அதிகாரி போலீஸ் அலுவலகத்தினுள் நுழைந்துவிட்டார் ' என்று தகவல் கொடுத்தேன். இதன் பிறகு பகத்சிங், ஆசாத் நான் ஆகிய மூவரும் மறைந்திருந்து அந்த அதிகாரியைத் தாக்க சித்தமானோம்.

நான் காலையில் கண்ட அதே போலீஸ் அதிகாரி மாலை நான்கு மணிக்கு ஹெட் கான்ஸ்டபிள் சானன்சிங் பின் தொடர, சிவப்பு மோட்டார் சைக்கிள் ஒன்றில் வருவதைக் கண்ட நான் உடனே என் சகாக்களுக்கு ' சிக்னல் ' கொடுத்தேன். அவர்கள் உஷாராகி அந்த ஆங்கில அதிகாரியைச் சுட்டு வீழ்த்தினர். அவர் ஸ்காட் அல்ல; சாண்டர்ஸ் என்பவரே என்பது பின்னால்தான் எங்களுக்குத் தெரிய வந்தது.

அவரைச் சுட்டபின், போக்குவரத்து அதிகாரி பெர்ன், ஹெட் கான்ஸ்டபிள் சானன்சிங் இருவரையும் நோக்கி என் சகாக்கள் சுடலாயினர். பெர்ன் தப்பித்துக் கொண்டார். சானன்சிங் ஆஸ்பத்திரியில் இறந்தார். நாங்கள் தப்பி ஓடியபோது ஒரு துப்பாக்கி தவறி விழுந்து விட்டதை அப்போது உணரவே இல்லை.

-- இப்படி நடந்த விவரங்களைச் சொன்னான் ஜெயகோபால்.

பகத்சிங், சிவராம் ராஜகுரு, சுகதேவ் ஆகிய மூவருக்கும் மரண தண்டனை கிடைத்தது. மீதி ஒன்பது எதிரிகளுக்கும் வெவ்வேறு கால அளவுக்குச் சிறை வாசமும், தீவாந்திர தண்டனையும் கிடைத்தன.

லாகூர் மத்திய சிறையில் மார்ச் 23, 1931இல் பகத்சிங் உள்ளிட்ட மூவருக்கும் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக பாரதம் முழுவதும் ' ஹர்த்தால் ' நடைபெற்றது. ●

ராமகிருஷ்ண பரமஹம்சர் ஆசிரமத்தில் ஆயிரக்கணக்கில் லட்டுகள் செய்திருந்தார்கள். எறும்புகள் படையெடுத்தால் என்ன செய்வது? பரமஹம்சர் ஒரு யோசனை சொன்னார். “ லட்டுகளிலிருந்து சிறிது தள்ளி, சுற்றிலும் ஒரு சர்க்கரை வட்டம் போடுங்கள் ” என்று. எறும்புகள் சாரிசாரியாய் வந்தன. சர்க்கரையைத் தின்றுவிட்டு சென்றன.

பலரும் பரமஹம்சரைப் பாராட்டினார்கள். அவர் கவலையாகச் சொன்னார். “ மனிதர்களும் இந்த எறும்புகள் போலத்தான். லட்டுகள் இருந்தாலும் அவை சர்க்கரையிலேயே சமாதானம் அடைகின்றன. மனிதர்களும் பெரிய பெரிய இலட்சியங்களை எட்டாமல் சிறிய இன்பங்களிலேயே சந்தோஷம் அடைந்து விடுகிறார்கள் ”

# காணவில்லை

## இந்த சிறுவனைக் கண்டுபிடிக்க உங்களது உதவி தேவை

கஜந்தனை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

அவன் எங்கிருக்கிறான் என்று உங்களுக்குத் தெரியுமா?

உங்களால் உதவ முடியுமா?



பெயர்: கஜந்தன் அண்ணாதுரை
வயது:14
காணாமல்போன இடம்: சவுத்ஹால
கடைசியாய் காணப்பட்ட தேதி: 29 செப்டம்பர் 2005

020 8358 0200

0500 700 700

METROPOLITAN POLICE Working together for a safer London

CRIMESTOPPERS

ஒருவருக்கு அனுகுமுறை நன்றாக அமைந்துவிடுமானால், அவர் பிறரிடம் பழகும் பான்மை பாராட்டத்தக்க வகையில் இருக்கும். உறவுகள் வளர மனிதநேயமே ஊற்றுக்கண்ணாகும்.

' தொல்லுலக மக்கள் எல்லாம் ஒன்றே என்னும் என்னும் தாயுள்ளம்தான் தரணிக்குத் தொண்டு செய்யும் தூய உள்ளம் ஆகும். எனவேதான் யாதும் ஊரே யாவரும் கேளிர் ' என்ற உலகளாவிய உறவு ஒவ்வொன்றுக்கும் தேவை.

மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒரு வட்டத்தின் மையம் எனவும், அவரைச் சுற்றி அடுக்கடுக்கான பல வட்டங்கள் சூழ்ந்து உள்ளன எனவும் ஒரு கிரேக்க அறிஞர் கூறியுள்ளார்.

முதல் வட்டத்தில் மனைவி, மக்கள் இருப்பர்; இரண்டாவது வட்டத்தில் நட்பும் சுற்றமும் சூழ்ந்திருக்கும். பின்னர் வரும் வட்டங்களில் நாட்டு மக்களும் மனித குலமும் வலம் வரும். இவ்வாறு விரிந்து செல்லும் வட்டத்தினுள் வையகமே வந்துவிடும்.

குடும்ப விழாக்களில் உறவினர்களும் நண்பர்களும் ஒன்று கூடுகிறார்கள். இங்கு சிரிப்பும் சந்தோஷமும் மையம் கொண்டு விடுவதால் இன்பம் தாண்டவமாடுகிறது. சுற்றங்கள் சூழ இருப்பதனால் இக்குடும்பம் சுவர்க்கபுரியாய் மாறிவிடுகிறது. தனி மனித மகிழ்ச்சியே தரணியின் மகிழ்ச்சிக்கு வித்தாகும்.

' அண்ணன் என்னடா? தம்பி என்னடா ? ' அவசரமான உலகத்திலே என்பது திரைப்பாடல். காலையில் படுக்கையில் இருந்து எழுந்தது முதல் இரவு படுக்கைக்குப் போகும் வரை ஒரே பரபரப்புதான் இந்தக் குடும்பத்தில். ஃபாஸ்ட் புட், இன்ஸ்டன்ட் காபி, உடனடி சாம்பார், திடீர் ரசம்... ஸ்பீட் போஸ்ட், வாகனங்கள் எல்லாம் வானில் பறப்பது போன்ற வேகம். அண்டை வீடு, பக்கத்து வீடு போன்றவற்றில் யார் குடியிருக்கிறார்கள் என்று நின்று கவனிக்க நேரமில்லை. அப்படி ஒரு அவசரம்.

இதன் காரணமாகத்தான் உடல் நோயும் உள்ள நோயும் நம்மைத் தஞ்சம் அடைகின்றன. அவசர அவசரமாக நடுவயது வரை திரைகடல் ஓடியும் திரவியம் தேடுகிறோம். பின்னர் வந்து விட்ட நோய்களுக்காக மெல்ல மெல்லச் செலவழிக்கிறோம்.

குறுகிய சுவர்களும் குட்டிச் சுவர்களும் நாட்டைப் பிளவு படுத்துகின்றன. நீண்ட பாலம் – நின்று பேர் சொல்லும் பாலம் வைத்தால், பிரித்ததைச் சேர்க்கும் தகுதி பெற்றுவிடும். கத்திரிக்கோல் பிரிக்கிறது. ஊசி, பிரித்ததை இணைக்கிறது. இணைந்த நெஞ்சங்களும் நாடுகளும் என்றென்றும் இன்பத்தில் திளைக்கும் என்பது உறுதி.

# உறவை வளர்க்கும் உத்திகள்

குழந்தைகள் இயல்பாகப் படிக்க உதவ வேண்டும். உற்சாகப்படுத்த வேண்டும். ' நீ தேர்வில் நல்ல மதிப்பெண் பெறுவாய் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது ' என்று நாம் பிள்ளைகளிடம் கூறும்போது, அவர்கள் பொறுப்புணர்ச்சி பெறுகிறார்கள்.

மற்றவர்களோடு ஒப்பிட்டுக் காட்டி குழந்தைகள் மனதில் தாழ்வு மனப்பான்மையை உண்டாக்கிவிடக்கூடாது.

பிற பெண்களின் பட்டாடை, பளிச்சிடும் நகைகள், பயணிக்கக் கார் வசதி, பளிங்கு போன்ற பங்களா, எடுபிடியாட்கள் – இன்னோரன்ன வசதிகளைக் கண்டு ஓயாப் பெருமூச்சில் காலம் தள்ளுகின்றனர் பலர். அலுவலகத்திலிருந்து களைத்துப் போய் வந்துள்ள கணவனிடம், காபிக்குவளையைக் காட்டாமல், ' அடுத்தாத்து அம்புஜத்தைப் பார்த்தேளா ? ' பாட்டுப் பாடிப் புலம்பும் பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இவ்வாறு எல்லா நிலைகளிலும் பிறரோடு ஒப்புமை காட்டிப் பேசினால், நெஞ்சுக்கு நிம்மதியும் உள்ளத்தில் அமைதியும் வாய்க்காது.

நாம் குழந்தையாக இருக்கும்போது நடக்கவும் உணவு உட்கொள்ளவும் உடை உடுத்தவும் பிறரைச் சார்ந்திருக்கிறோம். பின்னர் படிப்படியாக நம் தேவைகளை நாமே நிறைவேற்றிக் கொள்கிறோம். பிறருக்கும் உதவுகிறோம். பிறரைச் சார்ந்து வாழ்ந்த நிலைக்கு விடை கூறி விட்டு, நம்மை நாமே நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறோம். தன்னலத்தைப் பொதுநலத்தில் கரைத்துவிட்டுச் சமுதாயப் பணிக்கு நம்மை முன்னிலைப்படுத்திக் கொள்கிறோம். கணவனும் மனைவியும் குழந்தைகளுமாக இல்லறப் பூங்காவில் கருத்து ஒருமித்து வாழும் வாழ்க்கையே உயர்ந்த வாழ்வின் ஊன்றுகோலாகும்

கணவனும் மனைவியும் சமநிலையில் அன்பு காட்டி வாழ்தல் அவசியமாகும். கணவன், தான் அவளைவிடவும் மேம்பட்டவன், எனக்கு அவள் தொண்டு செய்ய வந்த அடிமை என உதாசீனம் செய்தால், குறைத்து மதிப்பிட்டால் லட்சியத் தம்பதிகள், அலட்சிய பேய்க்கு ஆட்பட்டு அவமானம் அடைய நேரிடும். உள்ளத்தில் ஏற்பட்ட உறவு விரிசல், விரிவாகி விவாகரத்து வரை வந்து விடுகிறது.

முத்தாரத்தில் உள்ள எல்லா முத்துக்களையும் இணைத்துக் கொண்டிருப்பது ஒரு நூல் ஆகும். நூலசைந்தால் கோக்கப்பட்டுள்ள முத்துகளும் அசையும், மனித சமுதாயத்தில் எல்லாரையும் பிணைத்திருப்பது நல்லுறவே. எனவே உயிர்கட்குத் தொண்டுசெய்து உறவைப் பலப்படுத்துவோம் !

நன்றி : தினமணி

# மொழி கற்பித்தல் மேற்கொள்ளற்கு முன் இருக்க வேண்டிய கருத்துத் தெளிவு

தமிழ் மொழி கற்பித்தலில் ஓர் உன்னத நிலையினை எய்துவதற்கான வழிவகைகள் பற்றி ஆராயப்படும் பொழுது முதலில் நாம் மேற்கொள்ளும் முயற்சியின் தன்மை பற்றிய கருத்துத் தெளிவினைக் கொண்டிருத்தல் மிகமிக அவசியமாகும். தாய்மொழி கற்பித்தல் எனும் இவ்விடயம் பற்றிய சிந்திப்பு.

(அ) மொழி, (ஆ) கற்றல், (இ) கற்பித்தல், (ஈ) சூழல் என்னும் நான்கு விடயங்கள் பற்றிய கருத்துத் தெளிவினை ஏற்படுத்தல் வேண்டும். (Stern, 1987 : 48 - 50) இத்தெளிவினைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் பின்வரும் வினாக்களை முன்வைக்க வேண்டும் எனப் பேராசிரியர் ஸ்ரேண் கூறுவர்.

**முதலாவது வினா – மொழியின் தன்மை, இயல்பு பற்றியது**

'' தமிழ் மொழியில் உன்னதம் '' என நாம் கூறும்பொழுது, மொழி பற்றி நாம் கொண்டுள்ள கொள்கை யாது அதாவது தமிழ் மொழியை நாம் கற்பிக்கப் போகின்றோம் எனும் பொழுது அம்மொழியின் எவ்வெவ் அம்சங்கள் கற்பிக்கப்படவுள்ளன என்பது பற்றிய தெளிவு நமக்கு வேண்டும். இது தமிழ் பற்றி நாம் கொண்டுள்ள கருத்தினை வெளிக்கொணர்வதாக அமையும்.

**இரண்டாவது வினா**

கற்பவர் யார் என்பது, யாது என்பது பற்றியும் கற்றலின் தன்மை யாது என்பது பற்றியும் தெளிவினை ஏற்படுத்த உதவும். இதற்கான வினா பின்வரும் முறையில் அமையும். முதலாவது வினாவில் நாம் கிளப்பிய'' மொழி பற்றிய கொள்கை '' இந்த மொழிக் கொள்கையின்படி '' மொழிகற்றல் '' என்பதன் இயல்பு, தன்மை யாது?

நாம் ஏற்கனவே கூறியபடி, நாம் இங்குக் கற்பிக்க விரும்புவர் தமிழைத் தாய் நெறியாகக் கொண்டவரும் 5/6 - 15/16 வயது வட்டத்தினைக் கொண்டவரும் ஆவர். இவர் மட்டத்தில் மொழிக்கல்வி என்பது யாது? அதாவது இந்த மொழிக்கல்வி அவருக்கு எவ்வெவ்விடயங்களை அளித்தல் வேண்டும்

**மூன்றாவது வினா – மொழி கற்பிப்பவர் பற்றியும், மொழி கற்பித்தல் பற்றியும் தெளிவினைத் தருவதாகும்.**

மேற்கூறிய மொழிக்கொள்கையின் அடிப்படையில் நோக்கும் பொழுது மொழி கற்பித்தல் என்பது எவற்றை உள்ளடக்கியதாக அமையும்? மொழியைக் கற்பிக்கும் ஆசிரியனின் பணி யாது? அவர்களின் பயன்பாடு யாது? அந்தக் கற்பித்தலை நாம் எவ்வாறு விவரிக்கலாம். இந்த மாநாட்டைப் பொறுத்தவரையில் இவ்வினா மிக முக்கியமானதாகும்.


நான்காவது வினா - இது மொழி கற்கப்படும், கற்பிக்கப்படும் சூழலைப் பற்றியதாகும். அதாவது எந்த ஒரு '' மொழி கற்றலும் '' வெற்றிடத்தில் நடைபெறுவதில்லை. அந்தக் கற்பித்தலுக்கான சமூக, பண்பாடு அரசியற் பின்புலங்கள் உள. அவற்றின் தன்மைக்கு ஏற்பவே கற்பித்தல் நடைபெறும். இதனால் இந்நான்காவது வினாவை மூன்று நிலைப்படுத்தி நோக்கலாம்.

1. கற்பவரின் மொழிச் சூழல் யாது? தமிழ்மொழிக்கல்வி, இவருக்கு எச்சூழலில் ஏன் எவ்வாறு அத்தியாவசியமாகின்றது.
2. இம்மொழிக் கல்வியை மேற்கொள்பவரின் கல்விச்சூழல் யாது? இது '' முதல் '' மொழியா? அல்லது இரண்டாவது மொழியா? அந்தக் கல்வியமைப்பில் இம்மொழி இடம்பெறும் இடம் யாது?
3. தமிழ்மொழி பயிற்றல் பற்றிய எத்தகைய அனுபவத்தின் புலத்துடன் இக்கற்பித்தல் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

முதலாம், இரண்டாம் உப வினாக்களிற் கிளப்பப்பட்ட கல்விப்பிரச்சினைகளை எதிர் கொள்வதற்கு இப்பயிற்றல் முறை எவ்வகையில் உதவுகின்றது. இந்த நான்கு விடயங்களையும் மனத்திருத்தி, தமிழ் கற்பித்தலில் இன்று நாம் எதிர்நோக்கும் தமிழ்மொழிக் கல்வி நிலைமையினைப் பார்ப்போம்

**–முனைவர் கா. சிவதம்பி**


லொம்பிற்கில் தமிழ் மக்களுக்கேற்ற Shopping Centre








வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்



# ஐப்பசி மாதப்பலன் (நவம்பர் 15 - டிசம்பர் 15)

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாகரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465 செல் : 94441 17 1115

**மேடம்** வதந்திகளிலிருந்து விடுபடுவீர்கள். பேச்சாற்றல் பெருகும். பணவரவு அதிகரிக்கும். எதிர்ப்புகள் அடங்கும். அரசால் அனுகூலம் உண்டு. திடீர் பயணங்களால் அனுகூலம் உண்டு. கல்யாணம் நடக்கும். வேலை கிடைக்கும். பிள்ளைகள் நினைத்ததை சாதிப்பார்கள். கணவன் மனைவி உறவு மேம்படும் லாட்டரி மூலம் பணம் வரும். புது நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் லாபம் பெருகும். நீண்டநாள் எண்ணங்கள் நிறைவேறும் மாதமிது.

**இடபம்** கொஞ்சம் செலவினங்களும், தூக்கமின்மையும் வந்து போகும். பேச்சில் நிதானம் தேவை. வாகனச் செலவு அதிகமாகும். கணவன் மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். தொடர் தோல்வியிலிருந்து விடுபட்டு வெற்றியடைவீர்கள். பணப்பற்றாக்குறை வந்து போகும். வியாபாரத்தில் வேலையாட்களால் அனுகூலம் உண்டாகும். உத்யோகத்தில் புகழ் கூடும். நிதானமாக செயல்பட்டு வெற்றி பெறும் மாதமிது.

**மிதுனம்** யதார்த்தமாக பேசி சிலரிடம் சிக்கிக் கொள்ள வேண்டாம். பணவரவு உண்டு. ஆனால் சேமிக்க முடியாது. ஆடை, ஆபரணம் சேரும். மனைவி உடல் நலம் லேசாக பாதிக்கும். சகோதர சகோதரிகள் உதவுவார்கள். புது வேலை கிடைக்கும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டாகும். பங்குதாரர்களிடையே கசப்புணர்வு வந்து விலகும். நிதானம் தேவைப்படும் மாதமிது.

**கடகம்** மாதத்தின் மத்தியப்பகுதிவரை எதிலும் கவனம் தேவை. வீண் செலவுகளும், வாக்குவாதங்களும் அலைச்சலும் ஏற்படும். வீட்டில் சலசலப்புகள் வந்து போகும். பிள்ளைகள் விஷயத்தில் கவனம் தேவை. வியாபாரம் லாபம் தரும். உத்யோகத்தில் சம்பள உயர்வு உண்டு. சகோதரி உதவுவார். பிற்பகுதி இனிக்கும் மாதமிது.

**சிம்மம்** புதிய எண்ணங்கள், புதிய முயற்சிகள் யாவும் வெற்றி பெறும். மற்றவர்களுக்காக சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். உறவினர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சொத்துப்பிரச்சனைகள் தீரும். புது வேலைகள் கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் உண்டு. பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். உத்யோகம் நிம்மதி தரும். மகிழ்ச்சி தரும் மாதமிது.

**கன்னி** பேச்சால் வெல்வீர்கள். வழக்கு வெற்றி தரும். பணவரவு அதிகரிக்கும். ஆடை, ஆபரணம் சேரும். சுபகாரியங்களை முன்னின்று நடத்துவீர்கள். பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் அதிக லாபம் உண்டு. சகோதரப் பிரச்சனை தலை தூக்கும். முன்கோபம் தவிர்ப்பது நல்லது. வெற்றி தரும் மாதமிது.

**துலாம்** குழப்பம் தீரும். அரசால் ஆதாயம் உண்டு. ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். கணவன் – மனைவி உறவு இனிக்கும். வீடு வாங்குவீர்கள், மாறுவீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். வரவேண்டிய சொத்துக்கள் வந்து சேரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்யோகம் நிம்மதி தரும். பிரச்சனைகளிலிருந்து விடுபடும் மாதமிது.

**விருச்சிகம்** உங்கள் பேச்சிற்கு எல்லாரும் கட்டுப்படுவார்கள். பணத்தட்டுப்பாடு நீங்கும். அரசாங்க கெடுபிடிகள் குறையும். உறவினர்களால் ஆதாயம் உண்டு. பிள்ளை பாக்யம் உண்டாகும். கல்யாணப் பேச்சு வெற்றியடையும். வியாபாரத்தில் புது பங்குதாரர்கள் வந்து சேருவார்கள். உத்யோகத்தில் சம்பளம் உயரும். ஆசைகள் கனியும் மாதமிது.

**தனுசு** அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு. எலக்ட்ரானிக் மற்றும் ஆடம்பரச் சாதனங்கள் வாங்குவீர்கள். வாகனம் வாங்குவீர்கள். நீண்ட நாள் குழப்பமும் நீங்கும். புது நண்பர்களால் பயனடைவீர்கள். பிள்ளைகள் அதிரடி முன்னேற்றம் காண்பார்கள். வியாபாரத்தில் ஏற்றுமதி வகைகளால் ஆதாயம் உண்டாகும். உத்யோகத்தில் சம்பளம் கூடும். தடைகள் உடைபடும் மாதமிது.

**மகரம்** மனக்குழப்பம் நீங்கும். எதிர்த்தவர்கள் அடங்குவார்கள். பழைய கடன் பிரச்சனை தீரும். வழக்குகள் சாதகமாகும். பிள்ளைகளால் பெருமையுண்டு. சொந்த ஊரிலிருந்து நல்ல செய்திகள் வரும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் வருவார்கள். உத்யோகத்தில் நிதானம் தேவை. மற்றவர்களின் விஷயங்களில் தலையிடாமல் இருக்கவேண்டிய மாதமிது.


**கும்பம்** தைரியமாக எதையும் செய்வீர்கள். பணம் பல வழிகளில் வரும். வீடு, மனை, வாகனம் வாங்குவீர்கள். பழைய கடன் தீரும். வேலை கிடைக்கும். கல்யாணப் பேச்சு வெற்றி தரும். உத்யோகத்தில் முன்னேற்றம் உண்டு. புது வாய்ப்புகள் தேடி வரும். பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் தரும் மாதமிது.

**மீனம்** எதிலும் கொஞ்சம் நிதானமாக பேச வேண்டும். பணவரவு உண்டு. சொத்து சேரும். ஆனால் வதந்திகள் வந்து போகும். கணவன், மனைவிக்குள் வாக்குவாதங்கள் வந்து விலகும். வியாபாரத்தில் புது முயற்சிகள் வெற்றி அடையும். பழைய கடன் தீரும். உத்யோகத்தில் அதிகாரிகளின் கெடுபிடி குறையும், தலைசுற்றல், வயிற்றுக் கோளாறு வந்து போகும். பிள்ளைகளால் நிம்மதி உண்டு. சற்றே நிதானம் தேவைப்படும் மாதமிது.




1.10.2005இல் அவிநாசிலிங்கம் சிற்றம்பலம் மண்டபத்தில் நடைபெற்ற
சீர் வளர் சீர் தவத்திரு பேரூர் ஆதீனம் சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் முத்துவிழாவின்போது
நடிகர் சிவகுமார் அவர்களுக்குத்ள தமிழர் தகவல் பதிப்பாசிரியர் மரியாதை செய்யும்போது எடுத்த படம்

---


## இப்போது லண்டனில் கிடைக்கிறது

- இரண்டாயிரம் ஆண்டு காலத் தமிழ்த் தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
- தமிழ்த் தேசியத்திற்கு உணர்வூட்டிய திராவிட இயக்கங்களின் பங்களிப்பு
- தந்தை பெரியாரின் தமிழ்த் தேசியப் பார்வை

முதலான செய்திகளைக் கொண்ட

**பொடா சிறையில் உருவான**

**சுப. வீரபாண்டியனின்**

# பெரியாரின் இடதுசாரித் தமிழ்த் தேசியம்

நன்கொடை **£ 2 /-**

தொடர்புகளுக்கு : திருமுருகன் அறிவகம்
இலண்டன்
தொலைபேசி : 020 8480 3320

# STARR ESTATES LIMITED

**ESTATE AGENS · VALUERS · SURVEYORS**
**PROPERTY CONSULTANTS**

- Sales
- Lettings
- Property Management
- Surveyors
- Valuations
- Mortgages
- Re-Mortgages
- Commercial Loans
- Buildings & Contents Insurance
- Life Insurance

Advice and assistance on purchase of investment abroad including Europe, Middle East ( Dubai ) and Far East

**Please call us with your requirements**
**ADVICE ON FINANCIAL SERVICES PROVIDED BY QUALIFIED ADVISORS**

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

CENTRAL PARADE
Station Road Harrow Middlesex
HA1 2TW
Tel : 020 8427 5328
Mob : 07956 543 044
Fax : 020 8863 5705
Email : info@starrestatesltd.co.uk
Web : www.starrestatesltd.co.uk



# இந்திரா செபஸ்தியன் சட்டத்தரணிகள்

**1 Central Parade, Station Road, Harrow,**
**Middlesex HA1 2TW**

## IMMIGRATION

குடிவரவு தஞ்சம் கோருவோர் விண்ணப்பம் (asylum)

கல்வி /தொழில் / உயரிர்தொழில்நுட்பம்
(work permits / HSMP / SEGS / SBS)

வியாபாரப்புலம்பெயர்தல் (Business / innovator / investor)

பிரித்தானிய பிரஜைதாவுரிமை

பிரித்தானிய – இலங்கை இரட்டை பிரஜாவுரிமை!
(Dual citizenship)

திருமண அனுமதி விண்ணப்பம்

ஐரோப்பியர்களின் இருப்பிட விண்ணப்பம், மற்றும்

பிரித்தானியாவில் உறவின அகதிகள் Sponsor

## PROPERTY

கடை / வீடு வாங்கல், விற்றல்

வீடு–கடை உரிமையாளர்– குடியிருப்பாளர் பிணக்குகள்

வியாபாரஸ்தாபன குத்தகை On & Off licence

வியாபார பிணக்குகள் – ஒப்பந்தங்கள்

Business disputes & All types of Agreements

கம்பனி உருவாக்கம் – பிணக்குகள் –
பாங்ரப்ட் ( Bankruptcy )

சிவில் வழக்குகள்

குடும்பம் ( Family ) – தொழில் பிணக்குகள் ( Employment)

உயில் எழுதுதல்

Charity & Trust Related Work

**Intellectual Property / Information Technology**

வியாபார இலச்சினை (Logo / Trade Mark)

எழுத்தாக்கம் – இசையாக்கம் (Copy rights)

வெப்சைட் – கொம்ப்யுட்டர்

விஞ்ஞான கண்டுபிடிப்புகள் (Patents)

....................பதிவுசெய்தல்

**Tel : 0208 427 3303** **Fax : 0208 427 3313**

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## இட்லியின் பெருமை



பிரிட்டிஷ் பார்லிமெண்ட் குழு ஒன்று நல்லெண்ண அடிப்படையில் 1944இல் இந்தியாவிற்கு வந்தது. பம்பாய், டில்லி, கல்கத்தா ஆகிய இடங்களுக்குச் சென்ற இக்குழுவினர் சென்னைக்கும் வந்தனர். தாங்கள் ராஜாஜியைச் சந்திக்க விரும்புவதாகக் கவர்னர் ஆர்ச் பால்ரையிடம் கூறினர். ராஜாஜியோ, ரசிகமணி டி.கே.சி..யின் விருந்தினராக குற்றாலத்தில் இருந்தார். இருப்பினும் பிரிட்டிஷ் பார்லிமென்ட் குழுவினர் குற்றாலத்திற்கே சென்று ராஜாஜியைச் சந்திக்க முடிவு செய்தனர். இந்த தகவல் தந்தி மூலம் ராஜாஜிக்கு தரப்பட்டது.ராஜாஜிக்கு ஒன்றும் ஓடவில்லை. தன்னைச் சந்திக்க வரும் வெள்ளையர்களை உபசரிக்கும் வகையில் குற்றாலத்தில் இட வசதியோ, உணவு வசதியோ இல்லாததால் திகைத்தார்.

பின்னர், குற்றாலத்தில் இருந்து 80 கி.மீ., தொலைவில் உள்ள மணியாச்சி ரயில் ஜங்ஷனில் செயல்பட்டு வந்த ஸ்பென்சர் உணவு விடுதியில் இருந்து தன்னைக் காண வரும் வெள்ளையர்களுக்கு உணவு வாங்கி வந்து உபசரிக்க முடிவு செய்தார். இதை கேள்விப்பட்ட டி.கே.சி., ஏன் மணியாச்சியோடு நிறுத்தி விட்டீர்கள், சென்னைக்கே ஆள் அனுப்ப வேண்டியதுதானே என்று கிண்டலாகக் கேட்டார். வெள்ளைக்காரர்களுக்கு ஏற்ற உணவு குற்றாலத்தில் இல்லையே என்பதால் தான் இந்த ஏற்பாட்டைச் செய்ததாகக் கூறினார் ராஜாஜி.

அதற்கு டி.கே.சி., நம்முடைய இட்லி, தோசை, வடையை விட அவர்களுக்கு ஏற்ற நல்ல உணவு எங்கு கிடைக்கும் என்றார். முடிவாக, பிரிட்டிஷ் பார்லிமென்ட் குழுவினருக்கு அவற்றையே உணவாகத் தர ஏற்பாடு செய்யப்பட்டது.

குற்றாலம் வந்து இறங்கிய வெள்ளையர்களுக்கு ரவாகேசரி, இட்லி, தோசை, துவையல், சாம்பார், சட்னி பரிமாறப்பட்டன. அவற்றைச் சாப்பிட்ட பார்லிமென்ட் குழுவினருக்கு ஒரே ஆனந்தம். இங்கிலாந்தில் இந்த மாதிரி இட்லி, தோசை கடை ஒன்று போடுங்கள். இந்தியா, இங்கிலாந்துக்கு இடையிலான எல்லா பிரச்சினைகளும் தீர்ந்து விடும்... என்று கூறிக்கொண்டு ஆசையோடு அவ்வளவு பதார்த்தங்களையும் சாப்பிட்டனர். சாம்பாரின் ருசி அவர்களை அதிகமாகக் கவர்ந்த காரணத்தினால், டம்ளரில் வாங்கி குடித்தனர். இதைப் பார்த்த ராஜாஜிக்கு ஒரே அதிசயம். நமது உணவைப் பற்றியே நம்மால் சரிவர கணிக்க முடியவில்லையே. நம் பண்பாடும், கலாசாரமும் சேர்ந்ததல்லவா நமது உணவு முறையில் இருக்கிறது... என்று கூறி சந்தோஷப்பட்டார்.

பாரதி மணி என்ற மாத இதழிலிருந்து...

ஆசிரியர் குறிப்பு

(இப்போது லண்டனில் வேண்டிய அளவு இட்லிக் கடைகள் ஆங்காங்கே நிறுவப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.)



தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரும் அதன் செயலாளராகவும் தலைவராகவும் ஐந்து ஆண்டுகள் செயற்பட்ட திரு சி சிறிரஞ்சன் அவர்கட்கு அண்மையில் நடந்த 50வது பிறந்ததின விழாவின்போது சங்கத்தினர் வாழ்த்துப்பாவினை வாசித்தளித்தனர். சிறிரஞ்சன் தம்பதிகளுடன் சங்கத்தின் முக்கியஸ்தர்கள் சேர்ந்து எடுத்த படம்.



# சுதந்திரம் என்பது சலுகை அல்ல உரிமை...

## கவிஞர் காசி ஆனந்தன்

" ஈழத்தின் ஒவ்வொரு பறவையும், விடுதலையின் பாடலைத் தன் இறக்கைகளில் சுமந்து உலகெங்கும் பறந்து செல்கிறது! " என்கிறார் ஈழக் கவிஞர் காசி ஆனந்தன்

தாய் மண்ணைத் தொலைத்து, ஈழத்தின் நினைவுகளுடன் உலகெங்கும் அலையும் ஒவ்வொரு ஈழத் தமிழனும், இந்த உணர்ச்சிக் கவிஞரின் கவிதைகளுடன்தான் வாழ்கிறான். விடுதலைப் போராளி இயக்கங்களின் துப்பாக்கி முனைகளுக்கு நிகராக, காசி ஆனந்தனின் பேனா முனை பலவீனப்படுத்துவதாக என்றென்றும் ஒரு கொதிப்பு இலங்கை ராணுவத்துக்கு உண்டு. அதனாலோ என்னவோ... துப்பாக்கிப் பயிற்சிக்கு இலக்காக இவரது கட்-அவுட் 'களை நிற்க வைத்து, சிங்கள ராணுவத்தினர் சுட்டுப் பழகியதாகவும் ஒரு காலத்தில் சொல்வார்கள்.

இன்றும், உலகெங்கும் தன் உணர்ச்சிக் கவிதைகளால் ஈழத் தமிழர்களுக்கான விடுதலை விளக்கை எடுத்துச் செல்லும் இந்தக் கவிஞர், இப்போது தமிழகத்தில் முடக்கப்பட்ட அகதி வாழ்வு வாழ்கிறார். மிக நீண்ட இடைவேளைக்குப் பிறகு, விகடனுக்காக தன் மௌனம் கலைக்கிறார் காசி ஆனந்தன். உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்த விடுதலைப் புலி திலீபன் பற்றிப் பேச்சு வந்ததும், நொடிப் பொழுதில் கவிஞரின் கண்கள் குளமாகின்றன...

" திலீபனின் தியாக மரணம் என் வாழ்வில் என்றும் மறக்க முடியாத தருணம். ஈழத்தின் விடுதலை உணர்வு தமிழகத்திலும் தீயாகக் கொந்தளித்த நேரம் அது. அங்கே நல்லூர் முருகன் கோயிலில் திலீபன் சாகும் வரை உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். நான்தான் அந்தத் தம்பியை அழைத்துப் போய், விரத மேடையில் அமர வைத்தேன். 12 நாட்கள் சொட்டுத் தண்ணீர்கூட அருந்தாமல் வீர மரணம் அடைந்தான் தம்பி. உடல் துவண்டு, உயிர் அடங்கும் நேரத்திலும் கண்களில் ஒளி குன்றாத அந்தத் தம்பி ' என் கடைசித் தறுவாயில் காசி அண்ணாவின் கவிதை வரிகள் என் இதயத்தை நிரப்ப வேண்டும் ' என்று ஆசைப்பட்டான்.

' நம்புங்கள் தமிழ் ஈழம் நாளை பிறக்கும்...

நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்! ' என்ற எனது வரிகளைக் கேட்டபடியே திலீபனின் மூச்சு அடங்கியது. மரணத்தைத் தன் பக்கத்திலேயே வைத்து நேசித்தவன் திலீபன். அவனுடைய தியாகத்தை நினைக்கும்போது, ஈழத்துக்குள் காலடி எடுத்துவைக்க முடியாமல் இங்கே அகதி வாழ்க்கை வாழ்கிற எனது துயரம் ஒரு பொருட்டாக எனக்குத் தோன்றுவதில்லை " என்கிறார் காசி ஆனந்தன்.

அன்று முதல் இன்று வரையிலான தனது வாழ்க்கையின் ஓட்டத்தையும் மெதுவாக நினைவு கூர்கிறார்...

" ஈழம் இன்று உலகின் முற்றத்தில் நிமிர்ந்து நிற்கிறதென்றால், அதற்குப் புலிகளும் ஈழ மக்களும் கொடுத்த விலை கொஞ்சநஞ்சம் அல்ல. தமிழர்களுக்கு எதிரான வெறுப்பை விதைக்கின்ற வேலையை காலங்காலமாகச் செய்து வருகிறது சிங்கள அரசு. சிங்களக் குழந்தைகளின் பாடப் புத்தகங்களில் கூட வெறுப்பைக் கக்கி, பிஞ்சு உள்ளங்களிலும் தமிழர்களுக்கு எதிரான நஞ்சை விதைக்கும் அரசு அது.

நான் சிறுவனாக இருந்தபோது தமிழர்களை ' தமிழ் பள்ளோ ' என்றுதான் சிங்களவர்கள் அழைப்பார்கள். " பள்ளோ ' என்றால் ' நாயே ' என்று சிங்களத்தில் பொருள். பள்ளோ என்று அழைத்தவர்களை ' கொட்டியா ' என்று அழைக்க வைத்தோம். கொட்டியா என்றால், ' புலி ' என்று பொருள் !

எழுபதுகளின் துவக்கத்தில் என்னைக் கைது செய்து சிறையில் அடைத்தது சிங்கள ராணுவம். என் தம்பிகள் சிவஜெயம், சுதர்சனையும் ( பின்னர் சயனைடு அருந்தி இறந்தார் ) என் தங்கை சிவமலரையும் சிறையில் அடைத்தார்கள். நான் ஐந்து ஆண்டுகள் சிறையில் இருந்தேன்.

' பத்துத் தடவை பாடை வராது. பதுங்கிக் கிடக்கும் புலியே தமிழா... செத்து மடிதல் ஒரே ஒரு முறைதான்... சிரித்துக்கொண்டே செருக்களம் வாடா! ' என்று ஒரு கவிதை எழுதினேன். அந்தக் கவிதைதான் ' என்னை 'யே இலக்காக வைத்து அவர்கள் சுட்டுப் பழகும் அளவுக்கு அவர்களின் கோபத்தைக் பெரிதாக மூட்டிவிட்டது.

என்னோடு சேர்ந்து என் மனைவி சரோஜினிதேவியும் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டாள். அப்போதுதான் நாங்கள் அங்கிருந்து அகதியாக இன்னும் சிலருடன் தமிழ்நாட்டுக்கு வந்தோம். மீண்டும் நான் அங்கே போனபோது, மிகப் பெரிய

பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன. அவற்றை நிறைவேற்றிக் கொண்டிருந்தபோது, அங்கே நிலைமை மோசமடைய, மீண்டும் இந்தியாவுக்கு வந்தேன். இதோ, இப்போது பதினைந்து வருடங்களாக சென்னையில்தான் இருக்கிறேன். இப்போது நான் ஈழம் செல்ல விரும்பினால்கூட அரசு அனுமதிக்காது. நான் கண்காணிக்கப்பட்டு முடக்கப்பட்டு இருக்கிறேன்' என்கிற காசி ஆனந்தனின் சிரிப்பில் சிலிர்ப்பு வழிகிறது.

**“ இந்திய அரசு ஏன் உங்களை முடக்கி வைத்துள்ளது. ”**

“ அது ஏன் என்றுதான் எனக்கும் தெரியவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன் என்னுடைய தாயார் சுகவீனமாகி இறந்தபோது, ஈமக் காரியங்கள் செய்யக்கூட எனக்கு அனுமதி மறுக்கப்பட்டது. என் மீது சுமத்தப்பட்ட எந்த குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்படவில்லை. தனிப்பட்ட முறையில் எந்தத் தவறுகளும் நான் செய்யவில்லை.

இந்தியாவும், ஈழமும் நட்புடன் இருக்க வேண்டும் என்று எவ்வளவோ முயன்றோம். எங்களுடைய நோக்கம் ஒன்றுதான்... இந்தியா - ஈழத்தின் உறவை வலுப்படுத்துவதும், ஈழத்தில் இந்தியாவின் உதவியுடன் அமைதியைக் கொண்டுவருவதும், அமைதிப்படை ஏற்படுத்திய காயங்களைத் துடைப்பதும்தான் எங்கள் நோக்கம். நல்லெண்ணத்துடன் செயல்பட்ட என்னை மீண்டும் மீண்டும் விசாரணைக்கு உட்படுத்துவது மிகப் பெரிய துன்பமாக இருக்கிறது. என்னுடைய கடவுச்சீட்டு ( பாஸ்போர்ட் ) முடக்கப்பட்டுள்ளது.

‘ ஈழம் எங்கள் தாய்நாடு... இந்தியா எங்களின் தந்தை நாடு ’ என்று ஆன்டன் பாலசிங்கம் சொன்னதைத்தான் நினைவுகூர்கிறேன். தந்தையின் மடியில்தான் என் உயிர் போக வேண்டும் என்றிருந்தால், அதை யாரால் தடுக்க முடியும்? ”

**“ இப்போது இலங்கையில் நிலவும் அமைதி நிலையானதா, நிஜமானதா? ”**

“ சிங்களர்களுக்கும் தமிழர்களுக்குமான மோதல் என்பது இன்று நேற்றல்ல... 1500 ஆண்டு காலமாக நடந்து வரும் மோதல். சிங்களர்களின் நோக்கம், சிக்கலைத் தீர்ப்பதல்ல... தமிழர்களைத் தீர்ப்பதாக இருக்கிறது. சமாதானம் பேச வந்த நார்வேயைக்கூட சிங்கள அரசால் சகித்துக்கொள்ள முடியவில்லை. நார்வே அரசுக்கு எதிரான போராட்டங்களை சிங்கள பிக்குகளைத் தூண்டிவிட்டு சந்திரிகா செய்கிறார். ஒரு பக்கம் அமைதிப் பேச்சுவார்த்தை என்று சொல்லிவிட்டு, இன்னொரு பக்கம் விடுதலைப்புலிகளை தடை செய்யக் கோரி உலக நாடுகளுக்குக் கடிதம் எழுதுகிறார் சந்திரிகா.

ஒன்று தெரியுமா... வியட்நாம் தன்னுடைய விடுதலைக்குப் போராடியபோது சீனாவும் ரஷ்யாவும் வியட்நாமுக்கு உதவின. பாலஸ்தீனத்துக்கு அரபு நாடுகளின் ஆதரவு இருந்தது. பங்களாதேஷ் ஆக்கிரமிக்கப்பட்டபோது இந்தியா தன் கைகளில் தாங்கிப் பிடித்தது. ஆனால் 28 ஆண்டு காலமாக விடுதலைப் புலிகள் எந்த நாட்டின் தயவும் இல்லாமல் வீரம் செறிந்த ஒரு போராட்டத்தை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

அமைதிப் பேச்சு வார்த்தைக் காலத்தைப் பயன்படுத்தி, நூற்றுக்கணக்கான புலிகளைச் சிங்கள ராணுவம் கொன்று குவித்துள்ளது. இதனால், நிலவுவது அமைதியா போரா என்ற ஐயம் தமிழர்கள் மத்தியில் எழுந்துள்ளது. சுனாமிக்குப் பிறகு, உயிரையும் உடைமைகளையும் வீட்டையும் இழந்த தமிழர்களுக்கு, உலக நாடுகள் வழங்கிய உதவிப் பொருட்களைக் கூட கொடுக்காமல் நீதி மன்றத்தின் மூலம் தடுத்து வைத்திருக்கிறது சிங்கள அரசு. ஆழிப் பேரலையின் கோர தாண்டவத்தைப் பார்க்க வந்த கிளிண்டனைக் கூட ஈழப் பகுதிகளுக்குச் செல்ல, பாதுகாப்பு காரணங்களைக் காட்டி மறுத்திருக்கிறது. மீண்டும் மீண்டும் தமிழர்களை யுத்த முனைக்குக் கொண்டு செல்வதே சிங்கள அரசின் விருப்பமாக இருப்பதுதான் வேதனை ! ”

**“ விடுதலைப்புலிகள் தங்கள் பெயரை சர்வதேச சமூகத்திடம் கெடுத்து வைத்திருக்கிறார்களே? ”**

“ புலிகளை ஒரு போராளி அமைப்பாகப் புரிந்து கொண்டால் இந்த அவப்பெயரின் மீது இருக்கும் அரசியல் புரியும். உலகெங்கிலும் தேசிய இன விடுதலைக்காகப் போராடும் போராளிக் குழுக்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுதான் இது. ஈழ மக்கள் நிராயுதபாணிகளாக நின்றபோது, எமது மக்களைப் பாதுகாக்க ஆயுதம் எடுத்தார்கள் புலிகள்.

புலிகள் இல்லையென்றால், இலங்கையில் தமிழர்களின் கதி என்னவாகியிருக்கும் என்பதை நினைத்துப்பாருங்கள். அமைதிப் படையுடனான மோதல்கூட தங்களைத் தற்காத்துக்கொள்ள நடத்தப்பட்டதுதானே தவிர, இந்தியாவை எதிர்த்து அல்ல!

ஈழ மக்கள் கேட்பதெல்லாம் ஒன்றுதான்... பாலஸ்தீனப் போராட்டத்தைப் புரிந்துகொண்டதைப்போல, ஈழப்போராட்டத்தையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கட்டும். புலிகள் தங்கள் மீது சுமத்தப்படுகிற எல்லா களங்கத்தையும் துடைத்தெறிவார்கள்.

என் மண்ணின் விடுதலையை நாங்கள் மீட்டெடுப்போம். ஏனெனில் சுதந்திரம் என்பது சலுகை அல்ல... உரிமை ! ”

நன்றி : ஆனந்த விகடன்

# வான்புகழ் கொண்ட வள்ளுவம்

கலைஞர்

## சுற்றம் தழால்

உருக்குலையா மங்கை ஒளிமுகத்தை முத்தமிடக்
கருக்கலிலே கண் விழிக்கும் திருக்குவளை யென்று

அருமை நண்பர் சுரதா, வாழ்த்து மடலொன்று;
அறுபதாண்டுக்கு முன்பு என் திருமணத்தன்று எழுதி
வழங்கினார்.

அதில் அவர் மறவாமல் குறிப்பிட்டிருந்த திருக்குவளையை
அன்றுமின்றும் மறக்க முடியாமல் சென்னையிலே
வாழுகின்றேன் –

படித்த ஊர் என்பதனால் திருவாரூர் பசுமையாக
நெஞ்சில்!

பிடித்த ஊர், பிறந்த ஊர் திருக்குவளைதானே –

அடித்த கொட்டம் இரு ஊர்களிலும் இளமையிலே
அளவேது?

வெடித்த முல்லையரும்புக் கூட்டம் காற்றில்
விளையாடும் குளக்கரையில்,

இளைஞனாகப் பத்து வயதுப் பருவத்தில் அமர்ந்து
சிந்தித்த காட்சியெலாம்,
கலைஞனாக இற்றை நாள் நினைவுகளில் உருட்டித்
திரட்டிப் பார்க்கின்றேன்.

இடையில் எத்தனை ஆண்டுகள் எழுபது ஆண்டுகள்;
எப்படிப் பறந்தன !
தடையிலாப் பேச்சுக்குத் தையல் நாயகி அத்தை –
தலைக்குச்

சடை போட்டு பூ முடித்து என்னைப் பார்த்துக் களிக்கும்
தமக்கையர் இருவர்; தங்கக் கட்டிகள் குணத்தில் !

தாய் தந்தையரோ கேட்க வேண்டியதில்லை ; அவர்கள்
தவமிருந்து பெற்ற பிள்ளை நான் என்ற அன்புக்
கொஞ்சல் !

நடு வீட்டு நாராயணப் பிள்ளை நாதசுரக் கலைஞர்
நவநீத கிருஷ்ணன், முதல் வீட்டு முத்துக்குமாரர் மகன்

பட்டு, பாப்பா என்ற சிட்டுக் குருவிகள் பள்ளித் தோழிகள் !
பந்தமுள்ள சொந்தம் போல ரத்தினப் படையாச்சியார்

நந்தன் கதை முதல் நம்மாழ்வார் புராணம் வரையில் – என்
தந்தையிடம் விரிவாகக் கேட்டறிவார்.

இன்னும் எத்தனையோ உற்றார், உறவினர், நண்பர்கள்
பொன்னும் மணியுமாய் மின்னும் அணிகலனாய் –

பொருந்தியிருந்தார் எம்முடன் குளத்திற்குக் கரை போல!
பொய்யாமொழியார் குறளில் இந்தப் பொருத்தம்
தன்னை,

பொருள் விளங்கக் கூறும் பொலிவுதான் என்னே!
பொழுது போக்க மட்டுமின்றி, சுற்றத்தார்,
நண்பர்கள் – ஆலின்

விழுது போலச் சுற்றிலும் சூழ்ந்து கொண்டு
பழகுதலும் கருத்துப் பரிமாறுதலுமில்லையெனில்
– வாழ்க்கை

பாதுகாக்கக் கரையின்றி காணப்படும்
குளப்பரப்பாகவே தோன்றுமாம்.
குறளார் கூறுகிறார்;

குளத்தில் நீர் இருந்தும் பயனில்லை
அமைந்த கரையில்லா குளத்தை ;

குளம் என்றே
அழைக்கும் பழக்கமில்லை

" அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று"

( உற்றார் உறவினர், நணபர் எனச் சூழ இருப்போருடன் அன்பு கலந்து மகிழ்ந்து பழகாதவதுடைய வாழ்க்கையானது; கரையில்லாக் குளத்தில் நீர் நிறைந்ததைப் போலப் பயனற்றதாகி விடும்)

அதிகாரம் : 53 குறள் : 523



சிறையில்
விரிந்த
மடல்கள்
வைகோ
இந்த புத்தகத்தை BEST FOODன் மூன்று கடைகளிலும் முன்பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்
ரமணிச் சந்திரனின் புத்தகங்கள் அனைத்தும் £2க்கு விற்பனையாகிறது
259 - 261 London Road
West Croydon
Surrey CRO 2RL
020 8684 6269
364 - 366 Bath Road
Hounslow
Middlesex TW4 7HT
020 8577 6002
249 Northholt Road
South Harrow
HA2 8HN
020 8423 9933



MITHUS JEWELLERY
322-324 London Road Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756 Fax : 020 8683 1792
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்
DIAMONDS PALACE
76 Tooting High Street London SW17 ORN
Tel : 020 8767 5333 Fax : 020 8767 5814